DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan, Broker
Joy H Selvanayagam, Broker

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
Ragu Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

25வது ஆண்டை நோக்கி

Towards 25th Year in Publishing

www.canadauthayan.ca

UTHAYAN
# உதயன்

திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் சுடர் வீசும் வாரச் செய்தி இதழ்

$1.00

Tel : 416-752-1524
Fax: 416-752-6703

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள் பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel : 647-344-6600

KANAGAAMBIKAI PAWN BROKERS
416 269 7198

MORTGAGE மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

உதயம் 1261 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 5, 2020


- உலக நாடுகளில் கொரோனா நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவர்களின் தொகை நேற்று 6,681,670 ஆக உயர்ந்தது...
- உலகெங்கும் கொரோனாவினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 392,121 ஆக அதிகரித்துள்ளது...
- இலங்கையில் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை ஒன்றால் அதிகரிப்பு...
- அமெரிக்காவில் 'கொரோனா' விற்கு பலியானவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிப்பு. மொத்த இறப்பு 110,420 ஆக உயர்ந்துள்ளது.



கடந்த பல வாரங்களாக, உலக மக்கள் அனைவரையும் நடுங்கச் செய்யும் கொரோனா வைரஸ் நேற்று வியாழக்கிழமை மாலை வரை பலிகொண்ட மக்களின் எண்ணிக்கை நாடுகள் வாரியாக தரப்படுகின்றன.

| | | | | |
|---|---|---|---|---|
| அமெரிக்கா: 110420 | இத்தாலி: 33,702 | கனடா: 6238 | ஸ்பெயின்: 27,501 | இங்கிலாந்து: 40,129 |
| ஜேர்மனி: 8570 | சீனா: 4639 | பிரான்ஸ்: 29,132 | ஈரான்: 7627 | இந்தியா: 6691 |
| இலங்கை: 11 | பெல்ஜியம்: 9579 | பிரேசில்: 35005 | ரஸ்யா:- 5521 | |


## "கறுப்பினத்தவர்களுக்கு எதிரான இனவாதம் என்பது வெறும் வார்த்தைகள் அல்ல, அது நிஜமானதும் கூட..."



### ரொரன்ரோ காவல்துறை தலைமை அதிகாரி மார்க் சோண்டர்ஸ் தெரிவிப்பு

கறுப்பினத்தவர்களுக்கு எதிரான இனவாதம் என்பது வெறும் வார்த்தைகள் அல்ல, அது நிஜமானதும் கூட. ஒரு கறுப்பினத்தவன் என்ற வகையில் நான் அதை நன்கு விளங்கிக்கொண்டிருக்கின்றேன்" இவ்வாறு கூறினார் கனடாவின் ரொரன்ரோ பெரு நகர காவல்துறை தலைமை அதிகாரி மார்க் சோண்டர்ஸ் அவர்கள்.

(தொடர்ச்சி 3ம் பக்கம் பார்க்கவும்)





MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line Visit
(416) 489-2000 GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
✓ Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க...
மோகன் சுப்பிரமணியம்
Broker of Record / President
Direct Line: 416-321-2300 Office: 416-291-3000
6888 14th Avenue, Markham ON Independently owned and operated
PROPERTY MAX Realty Inc. Brokerage

# உதயன் சிறு விளம்பரங்கள் CLASSIFIED ADS

உதயனில் விளம்பரங்கள் இதயத்தில் பதிந்த ஓவியங்கள் அனேக வாசகர்களின் அபிமானத்தைப் பெற்ற பத்திரிகை உதயன்

## GHURUS TOWING

Forklift / Machinery move
Local / Long Distance Towing
Recovery Specialist
Flatbed Service
Lockout Specialist
Booster service
Flat Tire

We pay scrap up to $1000



**NIRMALAN (ROGER):**
**(416) 990-7777**
**(416) 984-7777**

## COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN:**
**(416) 894-6244**

## BASEMENT FOR RENT

Scarborough நகரில்
**Morningside / Sewells**
சந்திப்பிற்கு அருகில்
2 bedroom basement
with separate entrance & parking
வாடகைக்கு உண்டு.
Close to TTC & school.

**ஜோதி:**
**(416) 299-4904**
**(416) 912-1572**

## BASEMENT FOR RENT

Scarborough நகரில்
**Morningside / Sheppard**
சந்திப்பிற்கு அருகில் உள்ள வீட்டென்றில் basement இல் ஒரு அறை மட்டும் மூன்று நேர உணவோடு வாடகைக்கு வழங்கப்படும். ஆண் / பெண், வயதானவர்கள் அல்லது students விரும்பத்தக்கது. Parking வசதியும் உண்டு.

**Call: (416) 832-6345**

## Coming soon to shake hands with you!

நண்பன் WORLDWIDE

**91 784 5006977**

## இலங்கையிலுள்ள

**உங்கள் உறவினர்களுக்கு சென்றடைய**

நினைவஞ்சலி மற்றும் அந்தியேட்டி அழைப்பு விளம்பரங்கள் இலங்கையில் உள்ள பத்திரிகையில் பிரசுரிக்க எம்மை நாடுங்கள்...

*நினைவஞ்சலி Posters மற்றும் அந்தியேட்டி அழைப்பு நூல் வடிவமைத்து அச்சிட்டு செய்துதரப்படும்...*

**+94 777-555026**
6A, Perakumba Place, Wellawatte.

## RENOVATION (திருத்தவேலை)

வீட்டுத் திருத்தவேலைகள் செய்து முடிந்தவுடன் கழிவுப் பொருட்களும் அகற்றப்படுவதுடன், வேறு கழிவுப் பொருட்களும் எடுக்கப்படும்.

**Call:**
**(416) 732-9194**

## CLEANERS WANTED

அலுவலகங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் கிளினிங் வேலை (cleaners) செய்வதற்கு குடும்பமாக வரச்கூடியவர்கள் தேவை.

Cleaners wanted
(looking for family)
in **Woodbridge** area.

**Call: (416) 412-3223**

**TEL : (416) 752-1524 ----- FAX : (416) 752-6703 ---- uthayannews@yahoo.com**


# MONEY PROBLEMS?™

ஓர் சிறிய தொகையை மாதாந்தம் செலுத்துவதன் மூலம் உங்கள் கடனில் இருந்து விடுதலை பெறலாம்

## உங்களைக் கேளுங்கள்?



- நீங்கள் எப்பொழுதும் உங்கள் வங்கி தருகின்ற OVER DRAFT ஐ உபயோகிக்கின்றீர்களா?
- கடன் கொடுத்தவர்களால் உங்கள் வீட்டிற்கு அல்லது வேலைத்தளத்திற்கு தொலைபேசி அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்வதுண்டா?
- வாடகை, மோட்கேஜ், வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் சிரமப்படுகின்றீர்களா?
- நிதிப்பிரச்சனை உங்கள் திருமணத்தையோ அல்லது உடல் நலத்தையோ பாதிக்கின்றதா?
- CREDIT RATING உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கின்றதா?
- உங்கள் கார், வீடு, RRSP, பங்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்துவிடுவோம் என அஞ்சுகின்றீர்களா?
- உங்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டளைகள் உண்டா?
- உங்களுக்கு CRA உடன் தனிப்பட்ட வருமானவரிகள் அல்லது வேறு வரிகளினால் பிரச்சனைகள் உண்டா?

gta credit™

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான உங்கள் பதில் "ஆம்" என்று இருந்தால் நீங்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தனிப்பட்ட பிரத்தியேக சந்திப்பொன்றை மேற்கொள்ள வேண்டும். உங்கள் சந்திப்பு எமது அலுவலகத்தில் உள்ள அரச அங்கீகாரம் பெற்ற ஆலோசகர் ஒருவரோடு இடம்பெறும்



**Scarborough / Downtown Toronto: 416-489-2000**
**Mississauga / Brampton: 416-650-5400**



| Scarborough | Toronto/Downtown | North York | Mississauga | Brampton |
|---|---|---|---|---|
| 201-4433 Sheppard Ave. E Scarborough, ON, M1S 1V3 | 800-120 Eglinton Ave. E Toronto, ON, M4P 1E2 | 306-1280 Finch Ave. W North York, ON, M3J 3K6 | 110-93 Dundas Street E. Mississauga, ON, L5A 1W7 | 201-7990 Kennedy Rd. South, Brampton, Ontario, L6W 0B3 |

**Mark Shamly**
*Tamil Consultant*

*Proudly Served over 15,000 clients since 2004*
**Visit : GtaCredit.Com**

**Ajay Oberoi**
*Experienced Credit Counsellor*

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam

OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Suganthy, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

4062 Ellesmere Rd, Scarborough, ON, M1C 1J2,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
Email: uthayannews@yahoo.com Website: www.canadauthayan.ca

உதயன் கதிரோட்டம்

# தமிழர் தாயகத்தில் இனிமேல் எதிர்ப்பு அரசியல் தேவையில்லை. குறிப்பாக வடக்கில்...

எமது ஒவ்வொரு வார “கதிரோட்டம்“ அவ்வாரத்தின் அல்லது அந்த வாரத்தின் புதன் அல்லது வியாழக்கிழமைகளில் முக்கியத்துவம் பெறுகின்ற ஒரு விடயத்தைத் தழுவியதாகத் தான் கடந்த 24 வருடங்களாக எழுதப்பட்டு வருகின்றதை, தொடர்ச்சியாக படித்து வருகின்றவர்கள் அவதானித்திருப்பார்கள்.

ஆனால் இந்த வாரத்தின் கதிரோட்டத்தைப் படிக்கின்றவர்கள் அல்லது அதன் தலைப்பைப் பார்க்கின்றவர்கள், இலங்கையில் பொதுத்தேர்தல் ஒன்று வரப்போகின்றது, அதனால் தான் இந்த தலைப்பை இவ்வாரத்தின் “கதிரோட்டம்“ கொண்டிருக்கின்றது என்று கூட சிந்திக்கலாம்.

ஆனால் அதுவல்ல காரணம்,

நேற்றைய தினம் இலங்கையின் பிரபல பத்திரிகையாளரும் முன்னாள் வீரகேசரி பத்திரிகையின் ஞாயிறு பதிப்பின் பிரதம ஆசிரியரும் தற்போது கொழும்பிலிருந்து www.voiceoflanka.lk இணையத்தளத்தை நடத்தி வருபவருமான வீ. தேவராஜ் எழுதிய ஒரு கட்டுரையே எம்மை இவ்வாறான ஒரு விடயத்தை இவ்வாரத்தின் முக்கிய கருப்பொருளாகக் கொள்ளுமாறு தூண்டியது என்பதே உண்மை.

அவர் தனது கட்டுரைக்கு “மலையக மக்களின் உடனடித் தேவை- தமக்கான ஒரு தேசியத் தலைவர்“ என்று தலைப்பிட்டிருந்தார்.

இந்தக் கட்டுரையை எமது முகநூலிலும் என்னும் இணையத்தளத்திலும் படித்த சிலர், இந்த விடயம் வடக்கில் வாழும் தமிழ் மக்களாலும் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒரு முக்கிய விடயமாகும் என்பதை மிக அழுத்தமாக எழுதியிருந்தார்கள்.

பத்திரிகையாளர் தேவராஜ் அவர்கள் தனது கட்டுரையில் மறைந்த ஆறுமுகம் தொண்டமான் என்னும் மலையக அரசியல்வாதியைப் பற்றி உயர்வாக எழுதிய பின்னர் அவரது தந்தையார் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களைப் பற்றி குறிப்பிடுகையில் ”மலையக மக்களின் அரசியல் தொழிற்சங்க பலமே மலையக மக்களின் உரிமைகளை பெற்றுக்கொள்வதற்கான பயணத்தில் மறைந்த சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்களால் வெற்றிகளைக்குவிக்க முடிந்தது.என்றும் தனி ஒருவராக 1977 இல் நாடாளுமன்றம் நுழைந்த அவர் தோட்டத் தொழிலாளர்கள் உட்பட பலரை நாடாளுமன்றம் அழைத்துச் சென்றார்.

என்றும் குறிப்பிட்டிருந்தார்.


இதைத்தான் நாமும் எமது வடக்கு கிழக்கு தமிழ் அரசியல்வாதிகளுக்கும் தற்போது தேர்தலில் வேட்பாளர்களாக நிற்பவர்களுக்கும் கூற முனைகின்றோம்

.திரு தேவராஜ் மலையக அரசியல்வாதிகளுக்கு கூறியதைத் தான் நாம் எமது தமிழ் அரசியல்வாதிகளுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகின்றோம்.

”இனிமேல் தமிழர்களின் தலைமைகளாகிய உங்களுக்கு எதிர்ப்பு அரசியல் நடத்த வேண்டிய அவசியம் இல்லை. தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் செல்லும் நீங்கள் அந்த மக்களுக்கு நன்மைகளைச் செய்யாமல் தென்னிலங்கை அரசுகளுக்கு ஆதாரமாக இருந்துவிட்டு வந்தீர்கள். இனிமேல் அது எமக்குத் தேவையில்லை.

தமிழர் தாயத்திற்கான ஒரு தேசிய தலைமையை உருவாக்கி அந்தத் தலைமையின் கீழ் எமது குரலாக நில்லுங்கள் அப்போதுதான் இலங்கையின் தேசிய அரசியலிலும் செல்வாக்கு செலுத்தி எமது மக்களின் அவலங்களை நீக்க முடியும்.

# இந்த அடிகளார் கடுமையான நோயால் பீடிக்கப்பட்டது கூட பேரின வாதிகளின் சதிதான் என்பது உண்மையே





வணக்கத்திற்கு உரிய இராயப்பு யோசப் அடிகளார். அன்றும் இன்றும்

நெஞ்சில் உரமும் நேர்மை திறனும் மக்கள் சேவகனாக இறை வழியை தன் வாழ்வாக தெரிந்தெடுத்து நம்மிடையே தோன்றிய அரிய ஒரு மனிதர் இவர். வருடங்கள் பல நடந்த தமிழரின் ஆயுத போராட்ட காலங்களில் தன் உயிர் பயம் இன்றி தமிழருக்காக குரல் கொடுத்த ஒரே தமிழன் ஆகவும் இவரை சொல்லி விடலாம்.

பயம் ஒன்றே முன் நின்ற தமிழர் வாழ்வுக் காலம் அது. ஆய்தங்களால் அந்த பயத்தை ஒழிக்க முயன்று கொண்டிருந்த இளையோர் களின் போராட்டக் காலம். பாராளுமன்ற உறுப்பினர்கள் வேலைக்கு போவதற்காக மட்டும் தமது பெயர்களை உச்சரித்து கொண்டிருந்தனர். மீறினால் உயிர் இருக்காது. கடலில் கூட வலை போட்டே மீன்களை பிடிக்கலாம். ஆனால் ஒரு விரலால் கையை காட்டினால் போதும் அடுத்த கணமே தமிழர் உயிர்களை குடித்து கொண்டிருந்த அரசும் அதன் அடியா ட்களும்.

நீதி நேர்மையை ஒரு சிங்கள நண்பனால் கூட கேட்க முடியாத வாய் பூட்டு. கேட்டவர் களை இரவில் கூட்டி போய் காலையில் தலையற்ற உடல் களை வீதிகளில் விதைத்து போன ஸ்ரீலங்கா இராணுவம்.

இவற்றிற்கு இடையில் தோன்றிய இந்த தேவ தூதுவன் தமிழர்களின் ஒரே வெளிப்படையான பிரதி நிதியாக நேர் கொண்டு பேசியதை ஆச்சரியத்துடன் பார்த்து கொண்டு இருந்தோம். இவர் உண்மையிலேயே தமிழருக்காக பேசுகிறாரா? எப்படி இவரால் இப்படி பயம் துளியும் இன்றி பேச முடிகிறது? என்று சந்தேகம் கொண்டு பார்த்தவர்கள் உளர்.

அமெரிக்கா வெளி உறவு பிரதி நிதியாக John Keri அவர்களின் இலங்கை வருகையில் அவரை father சந்திக்க போகிறார் என்று அறிந்ததும் தமிழர் அளவற்ற மகிழ்வு அடைந்தார் . நமக்குரிய துயர்களை தேவைகளை உலகுக்கு சொல்லும் நல்ல தருணம் கைகூடுகிறது என்று அளவற்ற உவகையில் இருந்தோம்.

அந்தோ அது நடக்கும் முன்னர் சில மணிகளுக்கு முன்னர் எங்கள் கயவாநச கடுமையான நோய் கொண்டு விழுந்ததை கண்டு ஸ்தம்பித்து நின்றோம். இதுவும் கூட பேரின வாதிகளின் ஒரு சதி என்பதும் பிறகு நமக்கு தெரிய வந்தது.

இன்று மன்னாரில் கடும் நோயாளியாக தொடர்ந்தும் உடல் நிலையில் வீழ்ச்சி. ஒரு போர் வீரனை போன்ற தோற்றம் . நெடுந்தீவு என்னும் தனித்தீவின் அத்தனை லட்சணம் களையும் கொண்ட ஒரு வணக்கத்துக்குரிய பிதா! இன்றைய நிலை கனவிலும் நினைக்க முடியாதது என்றால் நம்ப த்தான் வேண்டும்.

இல் வாழ்வில் இருந்து ஒரு குழந்தை எனும் இருந்தால் இவருக்கு நடந்ததை தட்டி கேட்டு இருக்குமே என்று நினைத்து இருக்கிறேன்.

யாரும் கண்டு கொள்ளாமல் ஒரு சரித்திரம் வெகு சாதாரண மனிதனை போல நாட்களை கழித்த படி இருக்கும் இவரை நேரில் கண்ட அனுபவங்கள்.

என் கணவரின் மிக நெருங்கிய உறவினன் என்பதும் இவரை பற்றிய என் மனதின் துயருக்கு இன்னொரு காரணம். விடையற்ற பல வினாக்களில் எங்கள் வணக்கத்திற்கு உரிய பிதா இராயப்பு யோசப் அவர்களின் இன்றைய நிலைதான்.

- திருமதி கிருபா பிள்ளை

# ”கறுப்பினத்தவர்களுக்கு எதிரான இனவாதம் என்பது வெறும் வார்த்தைகள் அல்ல, அது நிஜமானதும் கூட..”

### றொரன்ரோ காவல்துறை தலைமை அதிகாரி மார்க் சோண்டர்ஸ் தெரிவிப்பு

”கறுப்பினத்தவர்களுக்கான இனவாதம் என்பது வெறும் வார்த்தைகள் அல்ல, அது நிஜமானதும் கூட. ஒரு கறுப்பினத்தவன் என்ற வகையில் நான் அதை நன்கு விளங்கிக்கொண்டிருக்கின்றேன்’’

இவ்வாறு கூறினார் கனடாவின் றொரன்ரோ பெரு நகர காவல்துறை தலைமை அதிகாரி மார்க் சோண்டர்ஸ் அவர்கள்.

நாளை மறுநாள் சனிக்கிழமை றொரன்ரோ மாநகரில் மக்கள் அதிகமாகக் கூடும் நகரப் பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி தொடர்பாகவும் அதன் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாகவும் ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த மே மாதம் 27 ம் திகதி, றொரன்ரோ மாநகரின் தனது வசிப்பிடத்தின் 26வது மாடியிலிருந்து கீழே விழுந்து இறந்த கோர்ச்சின்ஸ்கீ பேகுவற் என்னும் 29 வயதுடைய பெண்ணின் மரணத்தின் பின்னணியில் ஒரு பொலிஸ் அதிகாரி உள்ளதாக சந்தேகப்படும் இவ்வேளையில் அமெரிக்காவில் நான்கு பொலிஸ்காரர்களால் கொல்லப்பட்ட ஜோர்ஜ் புளோய்டின் இறுதிக் கிரியைகள் இன்னும் சில நாட்களில் நடைபெற உள்ளதாலும் வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும் றொரென்ருர் மாநகரில் சுமார் நான்கு ஆர்ப்பாட்டக் கூட்டங்கள் இடம்பெற உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது

இந்த கூட்டங்களுக்கு எந்தவகையான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்கின்றீர்கள் என்றும் ஊடகவியலாளர்கள் பொலிஸ் தலைமை அதிகாரிகளிடம் வினாவினார்கள் இன்று வியாழக்கிழமை பொலிஸ் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற இந்த பத்திரிகையாளர் சந்திப்பில் தொடர்ந்து கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட றொரன்ரோ பெரு நகர காவல்துறை தலைமை அதிகாரி மார்க் சோண்டர்ஸ் அவர்கள் “வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் இங்கு நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டக் கூட்டங்கள் இரண்டு கொலைச் சம்பவங்களுக்காகவே நடைபெறுகின்றன என்பதை எமது பொலிஸ் திணைக்களம் நன்கு உணர்ந்துள்ளது.

கடந்த மே மாதம் றொரன்ரோ மாநகரின் தனது வசிப்பிடத்தின் 26வது மாடியிலிருந்து கீழே விழுந்து இறந்த கோர்ச்சின்ஸ்கீ பேகுவற் என்னும் 29 வயதுடைய பெண்ணினமரணத்தின் காரணமாகவும் அமெரிக்காவில் நான்கு பொலிஸ்காரர்களால் கொல்லப்பட்ட ஜோர்ஜ் புளோய்டின் கொலைக்கு காரணமாகவும் இந்த ஆர்ப்பாட்டக் கூட்டங்கள் நடைபெறுகின்றன. இதன் ஏற்பாட்டாளர்கள் எம்மோடு உரையாடுகையில் மிகவும் அமைதியான முறையில் தமது கூட்டங்க்ளை நடத்துவோம் என்று உறுதியளித்துள்ளார்கள்’’ என்றும் அவர் தெரிவித்தார்.

# பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவில் ஜீவன் தொண்டமான் கையொப்பமிட்டார்



பொதுத்தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் இளைஞர் அணி பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் இன்று (04.06.2020) மாலை 5 மணிக்கு கையொப்பமிட்டார்.

கொட்டகலையிலுள்ள தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் (சி.எல்.எவ்) இந்த நிகழ்வு நடைபெற்றது.

பொதுத்தேர்தலில் சிரீலங்கா பொதுஜன பெரமுனவின் மொட்டு சின்னத்தில் நுவரெலியா மாவட்டத்தில் களமிறங்கியிருந்த தலைமை வேட்பாளர் ஆறுமுகன் தொண்டமான் கடந்த 26 ஆம் திகதி அகால மரணமடைந்திருந்தார்.

இதனால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு அவரின் மகனான ஜீவன் தொண்டமானை நியமிக்குமாறு கடந்த 27 ஆம் திகதி பொதுஜன பெரமு-னவின் தலைவர் பிரதமர் மஹிந்த ராஜபக்சவை சந்தித்து இ.தொ.கா. முக்கியஸ்தர்கள் கோரிக்கை விடுத்தனர். பொதுச்செயலாளரின் கையொப்பத்துடனான கடிதத்தையும் கையளித்தனர்.

மேற்படி கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு ஜீவனிடம் கையொப்பம் வாங்குவதற்காக பொதுஜன பெரமுனவின் சட்டத்தரணிகள் குழு நேற்று கொட்டகலைக்கு வந்திருந்தது.

சிரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் நுவரெலியா மாவட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் ஐந்து வேட்பாளர்கள் இம்முறை போட்டியிடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 200 மில்லியன் புதிய பண நோட்டுக்கள் அச்சடிக்கவில்லை என அரசாங்கம் கூறுகின்றது



நாட்டின் பொருளாதார நெருக்கடியில் 200 மில்லியன் ரூபாய் பெறுமதியான பணத்தை புதிதாக அச்சடித்துள்ளதாக தவறான கருத்துக்கள் பரப்பப்படுகின்றன.

ஆனால் அவ்வாறு பணம் அச்சடிக்கப் படவில்லை. புதிய நாணயம் அச்சடிக்கப் பட்டிருந்தால் மத்திய வங்கியின் புதிய ஆளுநரின் கையொப்பம் இருக்க வேண்டும். அவ்வாறு உள்ளதா என்ற ஆதாரத்தை காட்டுங்கள் என அரசாங்கம் கூறுகின்றது.

அண்மையில் சமகி ஜன பலவேகயவின் வேட்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தற்போதைய அரசாங்கத்தினால் புதிதாக அச்சிடப்பட்ட 292 பில்லியன் ரூபாய் பணத்தில் 74 பில்லியன் எங்கே சென்றது என்றே தெரியவில்லை என தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பு நேற்று அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட அமைச்சரவை இணை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன இதனைக் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில் முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் மத்திய வங்கியில் இடம்பெற்ற மிகப்பெரிய கொள்ளையை அடுத்து வங்கிகள் மீதான நம்பிக்கை இழக்கப்பட்டுவிட்டது. எனினும் இப்போது எமது அரசாங்கத்தில் அதனை சரிசெய்து வருகின்றோம். வங்கிகள் மீதான நம்பிக்கைக்கு மத்திய வங்கி பொறுப்பேற்கும் என அவர்கள் வாக்குறுதிகளை வழங்கியுள்ளனர்.

அதேபோல் அரசாங்கம் புதிதாக 200 மில்லியன் ரூபாய்களை அச்சடிப்பதாக கூறுவது பொய்யான தகவலாகும். அவ்வாறு எதுவும் இடம்பெறவில்லை. நாட்டில் இப்போது பொருளாதார நெருக்கடிகள் உள்ளதை நாமும் ஏற்றுக்கொள்கிறோம்.

ஆனால் அந்த சுமையை நாம் மக்கள் மீது சுமத்தவில்லை. கொவ-ிட் 19 நெருக்கடியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கை வங்கியில் 1600 கோடி ரூபாய்களை பெற்றே மக்களுக்கு நிவாரணங்களை வழங்கினோம்.

நிதி முகாமைத்துவத்தை மிகவும் கவனமாக நாம் கையாள்கின்றோம். அனாவசிய செலவுகள் அனைத்தையும் நாம் கட்டுப்படுத்தி மக்களுக்கான சேவையை வழங்குகின்றோம்.

இவ்வாறு இருக்கையில் நாம் புதிய பணம் அச்சடித்துள்ளதாக கூறுகின்ற விடயம் குறித்து தெளிவான காரணிகள் எதனையும் முன்வைக்கவில்லை.

எவ்வாறான பணம் அச்சடிக்கப்பட்டுள்ளது என்பதை கூறவேண்டும். பணம் அச்சடிக்கப்பட்டால் புதிய பணத்தில் மத்திய வங்கி ஆணையாளரின் கையொப்பம் இருக்க வேண்டும். அவ்வாறு புதிய ஆளுநர் கையொப்பமிட்ட பணத்தை காட்டுங்கள் நாம் கவனம் செலுத்துகின்றோம் என்றார்.



# அனல் மின்நிலையமொன்றை உருவாக்க இந்தியாவிடமிருந்து 100 மில்லியன் டொலர்களை கடனாக பெற அமைச்சரவை தீர்மானம்

இலங்கையின் மின்சார தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய சூரியகல மின் உற்பத்தி நிலையம் மற்றும் அனல் மின்நிலையமொன்றை உருவாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்காக இந்தியாவிடம் இருந்து 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக பெறவும் அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பு நேற்று அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட அமைச்சரவை இணை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன இதனைக் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில் தேசிய மின் தட்டுப்பாட்டில் இருந்து விடுபடும் நோக்கத்தில்உடனடியாகநடைமுறைப்படுத்தப்படும் வகையில் புத்தளத்தில் அனல்மின் நிலையமொன்றை உருவாக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

300 மெகாவாட்ஸ் மின்சாரம் பெறக்கூடிய விதத்தில் இலங்கை மின்சாரசபை தலைவருக்கு உடன்படிக்கைகளைதயாரிக்கவும்பணிக்கப்பட்டுள்ளது.



கடந்த ஐந்து ஆண்டுகளில் எந்தவித மின் உற்பத்தி நிலயங்களும் உருவாக்கப்படாத காரணத்தினால் உடனடியாக இதற்கான நடவடிக்கைகள் எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தியாவிடம் இருந்து 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன் உதவியை பெற்று சூரியகல மின் உற்பத்தி நிலையமொன்றை உருவாக்கவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அரச நிறுவனங்களுக்கு இதன் மூலமாக மின்சாரத்தைவழங்கவும்ஆலோசிக்கப்பட்டுள்ளது என்றார்.

# 5 பில்லியன் டாலர் நஸ்ட ஈடு கோரி கூகுள் இணையதளம் மீது அமெரிக்காவில் வழக்கு

உலகளவில் புகழ்பெற்ற தேடுதல் இணையதளமான கூகுளுக்கு தற்போது புதிய பிரச்சனை ஒன்று உருவாகியுள்ளது.

இந்த தேடல் இணையதளத்தில் இன்காக்னிசோ மூட் (பிரைவேட் மூட்) என்ற தனியார் பயன்முறையில் ஒருவர் எதையாவது தேடுகிறபோது அவரது அந்தரங்க உரிமையை மீறி சட்டவிரோதமாக ஆக்கிரமித்து கண்காணிப்பதாக மிகப்பெரிய குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்த இன்காக்னிசோ மூட் பயன்முறையில் உபயோகிப்பாளர்கள் தேடுகிறபோது அவர்கள் எதையெல்லாம் தேடுகிறார்கள் என்பது கண்காணிக்கப்படாது என்ற நம்பிக்கையில்தான் தேடுகிறார்கள்.

அவர்கள் என்ன தேடுகிறார்கள் என்பதும் அதில் பதிவாகாது. அந்த நம்பிக்கையின் மீது இடி விழுந்தாற்போன்று இப்போது அது கண்காணிப்படுவது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இருப்பினும் இது தொடர்பாக கூகுள் நிறுவனம் 5 பில்லியன் டாலர் இழப்பீடு வழங்க வேண்டும் என்று கலிபோர்னியா மாகாணம் சான் ஜோஸ் நகரில் உள்ள மத்திய கோர்ட்டில் போயஸ் சில்லர் பிளெக்ஸ்னர் சட்ட நிறுவனம் வழக்கு தொடுத்துள்ளது.

அந்த வழக்கில் கூகுள் கணினி அல்லது செல்போனை கொண்டுள்ள ஒவ்வொருவரிடம் இருந்தும் ரகசிய மற்றும் அங்கீகரிக்கப்படாத தரவு சேகரிப்பில் தொடர்ந்து ஈடுபட முடியாது என கூறப்பட்டுள்ளது.


மேலும் எல்லா இடங்களிலும் உள்ள மக்கள் தங்களது தனிப்பட்ட தகவல் தொடர்புகள் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களால் தடுத்து சேகரிக்கப்பட்டு பதிவு செய்யப்படுகின்றன அல்லது ஆதாயத்துக்காக சுரண்டப்படுகின்றன என்பதை அறிந்து கவலைப்படுகிறார்கள் என்றும் வழக்கில் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கூகுள் செய்தி தொடர்பாளர் ஜோஸ் காஸ்டனெடா கூறியதாவது:- ஒவ்வொரு முறையும் நீங்கள் புதிதாக ஒரு அந்தரங்க பயன்முறை தாவலை (டேப்) திறக்கும்போது உங்கள் உலாவல் செயல்பாடுகள் குறித்த தகவல்களை சேகரிக்க முடியும் என்று சொல்கிறோம்.

இந்த பயன்முறையில் தேடுகிறபோது ஒருவர் எதை தேடுகிறார் என்பதை தேடுதல் சரித்திரம் மூலம் அறிந்து அந்த தளங்கள் அதன் உள்ளடக்கத்தையும் தயாரிப்புகளையும் சந்தைப்படுத்தல் மற்றும் செயல்திறனையும் சிறப்பாக மதிப்பீடு செய்ய முடியும் என்று அவர் கூறினார்.

சான் ஜோஸ் நகரில் உள்ள மத்திய கோர்ட்டில் போயஸ் சில்லர் பிளெக்ஸ்னர் சட்ட நிறுவனம் தொடுத்துள்ளஇந்தவழக்குவிரைவில்விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# தொலைந்துபோன பல்லாங்குழி விளையாட்டை மீட்டெடுத்த கொரோனா



உலகையே ஆட்டிப்படைக்கும் கொரோனா, தமிழனின் ஆறுதலாக்காக அவன் தொலைத்த பாரம்பரிய பல்லாங்குழி விளையாட்டை மீட்டெடுத்து தந்ததுள்ளது. ஊரடங்கில் உறங்கிக் கிடப்பவர்களை விழித்தெழ செய்திருக்கிறது. நம் பாரம்பரியத்திற்கு சொந்தமான உறங்கிக்கிடந்த விளையாட்டுகள் இப்போது கண்களில் நிழலாடுகிறது. விளையாடத்தான் விதியில்லை. நுங்கு வண்டியை உருட்டியபடியே கடைக்குச் செல்லும் சிறுவர்கள் இப்போது கண்ணில் படுவதில்லை. சைக்கிள் டயரை தட்டிக்கொண்டே கடைக்குச் சென்று குருவி ரொட்டியும் தேன் மிட்டாயும் வாங்கித்தின்ற காலம் மனக்கண்ணில் தெரிகிறது. சுற்றி நின்று பம்பரம் விளையாடும் காலம் இனி வரப்போவதில்லை. குச்சிக்கம்பு விளையாட்டை (ஒரு சிறிய குச்சியின் இருபக்கமும் கூம்புபோல் சீவி இருக்கும். அதை தரையில் வைத்து ஒரு பெரிய குச்சியால் சிறிய குச்சியின் ஒரு நுனியை தட்டினால் அது மேலே எழும்பும். மேலே எழும்பும் சிறிய குச்சியை பெரிய குச்சியால் அடித்து வெகு தூரம் பறக்க வைப்பார்கள். எதிரில் இருக்கும் இன்னொருவர் அந்த குச்சியை கையால் பிடித்து விட்டால் அடித்தவர் தோற்றுவிடுவார்.

அதாவது இப்போது ராஜ விளையாட்டாக கருதப்படும் கிரிகெட் விளையாட்டைப் போன்றது) இனி ஆடுவது எப்போது? கோலிக்காய் விளையாட்டு, கொக்கரக்கோ விளையாட்ட்டு, சிறுமிகளின் பாண்டி விளையாட்டு இப்படி எல்லாம் சிறுவர்கள் வீதிகளில் விளையாடிய விளையாட்டுகளை நாகரீகத் திருடன் திருடிவிட்டான். பெண்கள் வீட்டுக்குள் விளையாடும் கலஞ்சிக்கல் விளையாட்டு (ஏழு கூழாங்கற்களை தரையில் விரித்துவிட்டு, ஒரு கல்லை மேலே தூக்கி வீசிவார்கள். அந்தக் கல் கீழே வருவதற்குள், கீழே இருக்கும் மற்றொரு கல்லை கையில் எடுத்தபடியே மேலே இருந்து கீழே வரும் கல்லை கையில் ஏந்தி பிடித்துக் கொள்ளும் விளையாட்டு) ஆடுபுலி விளையாட்டு, பல்லாங்குழி விளையாட்டுகளை எல்லாம் நாகரீக செய்த சூழ்ச்சியில் நமக்குத் தெரியாமலேயே நாமே தொலைத்துவிட்டோம்.

அப்படி தொலைந்து போன ஒரு விளையாட்டான பல்லாங்குழி விளையாட்டை, கொரோனா என்ற கொடியவன் மீட்டெடுத்து தந்துள்ளான். நம்மை வீட்டுக்குள்ளேயே முடங்கிக்கிடக்க செய்த கொரோனாவால்தான் அந்த விளையாட்டு மீண்டும் தலைதூக்கியிருக்கிறது. சில நாட்களுக்கு முன்பு எனது புலனத்தில் ஒரு காணொளி காட்சி வந்தது. அந்தக்காணொளியை முடிக்கினேன். அதில் ஒரு பாட்டி தனது பேரன் பேத்தியுடன் பல்லாங்குழி விளையாட்டிக் கொண்டிருப்பதை பார்த்தேன். மனதுக்குள் ஒரு மகிழ்ச்சி. ஏன் என்றால் இதே விளையாட்டை நான் சிறுவனாக இருக்கும்போது எனது அம்மாவுடன் அக்கா விளையாடியதை பார்த்திருக்கின்றேன். அந்த காணொளியில் காரைக்காலில் வசிக்கின்ற 9 வயது ஸ்ரீவிசாகன் என்ற சிறுவனும் ஸ்ரீஹரணி என்ற சிறுமியும் தனது பாட்டியுடன் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த விளையாட்டைப்பார்த்து எத்தனை வருடங்கள் உருண்டோடிவிட்டன. ஊரடங்கல்லவா இதை மீட்டு தந்தது. காணொளியில் விளையாடிய சிறுவர்கள் ஊரடங்கில் சோர்ந்திருக்கும் நமக்கு அவர்கள் கூறியது வியப்பாகத்தான் இருந்தது. ஸ்ரீவிசாகன் மற்றும் ஸ்ரீஹரிணி ஆகிய இருவரும் தங்களது அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இதுதொடர்பாக அவர்கள் பேசுகையில், ““கொரோனா தனிமையால் வாடும் பெற்றோர்களுக்கும், மன அழுத்தத்தால் தவிக்கும் மாணவ மாணவிகளுக்கும் எங்களுடைய அனுபவம் பயனுள்ளதாக இருக்கும் என்று நினைக்கிறேன். இந்நிலையில் தங்களைத் தனிமைப் படுத்திக் கொண்டிருக்கும் எங்களைப் போன்ற மாணவ மாணவிகளுக்காக நாங்கள் கற்ற கராத்தே, சிலம்பம் போன்ற எண்ணற்ற பயிற்சியை காணொளி மூலமாக வழங்கியிருக்கிறோம். இந்த பயிற்சியை ஏராளமான மாணாக்கர்கள் செய்து மகிழ்ச்சி அடைந்ததாகவும் மன அழுத்தத்தில் இருந்து விடுபட்டதாகவும் பின்னூட்டங்கள் மூலமாக தெரிவித்திருக்கிறார்கள்.

இதனால் மேலும் அவர்களை உற்சாகப்படுத்துவதற்காக எங்களுக்கு மிகவும் பிடித்த பாட்டியிடம் பல்லாங்குழி ஆட்டம், தாயக்கட்டை உடனான பரமபத விளையாட்டு ஆகிய பாரம்பரியமிக்க விளையாட்டுகளை விளையாடினோம். இதன்போது எங்களுக்குத்



தெரிந்த நுட்பங்களை பாட்டிக்கும், பாட்டி காலத்து நுட்பங்களை நாங்களும் தெரிந்து கொண்டோம். இதன் காரணமாக உடலும் மனமும் ஒருமுகப்படுத்தும் வகையிலான பயிற்சியினை பெற்றோம். என்று அச்சிறுவர்கள் கூறியிருப்பதிலிருந்து நாகரீக நெருப்பில் எரிந்த பாரம்பரியங்கள் பீனிக்ஸ் பறவைபோல மீண்டும் மீண்டும் உயிர்தெழும் என்ற நம்பிக்கை பிறக்கிறது.

# மேலும் 11 பேர் உயிரிழப்பு : தமிழகத்தில் ஒரே நாளில் 1,286 பேருக்கு பாதிப்பு




இந்தியாவில் கொரோனா வைரசால் 2 லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தில் 200க்கும் மேற்பட்டோரின் உயிரை பறித்து உள்ளது. கடந்த 3 நாட்களில் மட்டும் தமிழகத்தில் 3 ஆயிரத்தில் 539 பேர் கொரோனா பிடியில் சிக்கி உள்ளனர். இதுதொடர்பாக சுகாதாரத்துறை சார்பில் நேற்று வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது: தமிழகத்தில் நேற்று ஒரே நாளில் 1,244 பேர் கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் வெளிநாடுகளில் இருந்து வந்த 15 பேர் மற்றும் வெளிமாநிலங்களில் இருந்து வந்தவர்கள் 27 பேருக்கும் நோய் தொற்று இருப்பது தெரியவந்துள்ளது. அந்த வகையில் இதுவரை இல்லாத அளவுக்கு தமிழகத்தில் நேற்று மொத்தம் 1,286 பேர் பாதிப்புக்கு ஆளாகி உள்ளனர்.

இதையடுத்து தமிழகத்தில் கொரோனா வைரசால் பாதித்தவர்களின் எண்ணிக்கை 25 ஆயிரத்து 872 ஆக அதிகரித்துள்ளது. தமிழகத்தில் நேற்று பாதிக்கப்பட்டவர்களில் 787 ஆண்களும், 498 பெண்களும், 3ம் பாலினத்தவர் ஒருவரும் உள்ளனர். தமிழகத்தில் கொரோனாவுக்கு நேற்று 11 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர். இதன் மூலம் பலி எண்ணிக்கை 208 ஆக அதிகரித்துள்ளது. தமிழகத்தில் நேற்று உயிரிழந்தவர்களில் சென்னையை சேர்ந்த 80, 75, 68, 63, 50 வயது ஆண்களும், 58 வயது பெண்ணும், திருச்சியை சேர்ந்த 70 வயது பெண்ணும், செங்கல்பட்டை சேர்ந்தை 48 வயது ஆணும், காஞ்சீபுரத்தில் 60 வயது ஆணும் பல்வேறு நாள்பட்ட நோய்களால் அவதிப்பட்ட நிலையில், கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர். மேலும் சென்னையை சேர்ந்த 66, 47 வயது ஆண்கள் 2 பேர் கொரோனா நோய் தொற்று காரணமாக உயிரிழந்துள்ளனர்.

தமிழக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த 610 பேர் நேற்று குணமடைந்தனர். தமிழகத்தில் இதுவரை 14 ஆயிரத்து 316 பேர் குணமடைந்து வீடு திரும்பி உள்ளனர். தமிழக மருத்துவமனையில் நேற்றைய நிலவரப்படி கொரோனாவுக்கு 11 ஆயிரத்து 345 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். தமிழகத்தில் நேற்று 27 மாவட்டங்களில் புதிதாக நோய் பாதிப்பு இருப்பது தெரியவந்துள்ளது. இந்த பட்டியலில் சென்னையில் 1,012 பேரும், செங்கல்பட்டில் 61 பேரும், திருவள்ளூரில் 58 பேரும், திருவண்ணாமலையில் 21 பேரும், காஞ்சீபுரத்தில் 19 பேரும், தூத்துக்குடியில் 17 பேரும், நெல்லையில் 12 பேரும், கோவையில் 9 பேரும், மதுரையில் 7 பேரும், கடலூர், தஞ்சாவூரில் தலா 6 பேரும், ராமநாதபுரம், ராணிப்பேட்டையில் தலா 5 பேரும், கள்ளக்குறிச்சி, தென்காசி, திருப்பத்தூர், வேலூரில் தலா 4 பேரும், சேலத்தில் 3 பேரும், திருவாரூரில் 2 பேரும், தர்மபுரி, கன்னியாகுமரி, கரூர், நாகப்பட்டினம், ராமநாதபுரம், தேனி, விழுப்புரம், விருதுநகரில் தலா ஒருவரும் இடம் பெற்று உள்ளனர்.

தமிழகத்தில் நேற்று 12 வயதுக்கு உட்பட்ட 59 குழந்தைகள், 60 வயதுக்கு மேற்பட்ட 185 முதியவர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டது. தமிழகத்துக்கு வெளிநாடுகளில் இருந்து வந்த 108 பேரும், வெளிமாநிலத்தில் இருந்து விமானம் மூலம் வந்த 27 பேரும், ரெயில் மூலம் வந்த 245 பேரும், சாலை மார்க்கமாக வந்த 1,344 பேர் என மொத்தம் 1,724 பேருக்கு இதுவரை கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் நேற்று 14 ஆயிரத்து 101 தொண்டை சளி மற்றும் ரத்த மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. இதுவரை 5 லட்சத்து 28 ஆயிரத்து 534 மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இதில் 5 லட்சத்து 2 ஆயிரத்து 173 மாதிரியில் கொரோனா பாதிப்பு இல்லை என தெரியவந்துள்ளது. 489 மாதிரிகளின் முடிவுகள் இன்னும் வரவில்லை. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## கொரோனா சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட திமுக எம்எல்ஏ ஜெ.அன்பழகன் கவலைக்கிடம்



கொரோனா சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டுள்ள திமுக எம்எல்ஏ ஜெ.அன்பழகன் கவலைக் கிடமாக உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இந்நிலையில், அன்பழகனின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது. மேலும் அவருக்கு வெண்டிலேட்டர் கருவி மூலம் 80 சதவீத ஆக்சிஜன் செலுத்தப்பட்டு வருவதாவும், கடந்த 24 மணி நேரத்தில் அவரது உடல்நிலையில் எந்த மாற்றமும் இல்லை எனவும் மருத்துவ அறிக்கையில் தகவல் வெளியாகி உள்ளது. அரசு பல்வேறு தீவிர நடவடிக்கைகளை எடுத்து வந்த போதிலும், தமிழகத்தில் கொரோனா புயல் வேகத்தில் பரவுகிறது. பொதுமக்கள் முதல் ஆளுநர் மாளிகை வரை சென்ற கொரோனா, தற்பொழுது எம்.எல்.ஏவயும் விட்டுவைக்கவில்லை. சென்னை சேப்பாக்கம்திருவல்லிக்கேணி தொகுதி தி.மு.க. எம்.எல்.ஏ.வாக இருப்பவர் ஜெ.அன்பழகன். 61 வயதான இவர் தியாகராயநகரில் வசித்து வருகிறார். இவருக்கு கடந்த சில நாட்களுக்கு முன்பு உடல்நிலை பாதிக்கப்பட்டது. இதற்காக கடந்த 2ம் தேதியன்று கொரோனா, மூச்சுத் திணறலுடன் சென்னை குரோம்பேட்டையில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு நடத்தப்பட்ட பரிசோதனையில் ஜெ.அன்பழகனுக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு இருப்பது உறுதியானது. இதனால் அவர் தொடர்ந்து ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார். இந்த நிலையில் திடீரென அவருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டதால் 'வெண்டிலேட்டர்' மூலம் செயற்கை சுவாசம் அளிக்கப்படுகிறது. தீவிர சிகிச்சையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு மருத்துவர்கள் தொடர்ந்து சிகிச்சை கொடுத்து வந்தனர்.

## கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்கள் தமிழகத்தில் தான் அதிகம் முதலமைச்சர் பழனிசாமி



சென்னையில் கொரோனா நோய்த் தடுப்புப் பணிகள் குறித்து முதலமைச்சர் பழனிசாமி தலைமையில் இன்று சென்னை மாநகராட்சி வளாகத்தில் உள்ள அம்மா அரங்கத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் உள்ளாட்சித் துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி, தலைமைச் செயலாளர் கே.சண்முகம், சிறப்பு அதிகாரி ஜெ.ராதாகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையர் கோ.பிரகாஷ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தின் போது, பல முக்கிய விஷயங்கள் மற்றும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. ஆலோசனை கூட்டத்திற்கு பிறகு முதலமைச்சர் பழனிசாமி செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

வடசென்னையில் தொற்று பரவலை தடுக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.அறிகுறி தென்பட்டால் உடனடியாக அதிகாரிகளுக்கு மக்கள் தெரிவிக்க வேண்டும். தமிழகத்தில் சென்னையில்தான் அதிகளவில் கொரோனா தொற்று உள்ளது.சென்னையில் மக்கள் நெருக்கம் அதிகமாக இருப்பதால் பாதிப்பும் அதிகமாக உள்ளது. முதியவர்களையும், கர்ப்பிணிகளையும் கொரோனா அதிகம் தாக்குவதாக மருத்துவர்கள் கூறுகிறார்கள். தமிழகத்தில் கொரோனாவுக்கு சரியான சிகிச்சை அளிக்கப்படுவதால் இறப்பு விகிதம் குறைவு. இந்தியாவிலேயே அதிகம் பேர் குணமடைவது தமிழகத்தில் தான். கொரோனாவை ஒழிக்க அரசு கூறும் அறிவுரைகளை பின்பற்றி மக்கள் செயல்பட்டால் விரைவில் இயல்பு நிலைக்கு திரும்பலாம். சென்னையில் மட்டும் தினமும் 4,000 பேருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்படுகிறது. கொரோனாவை ஒழிக்க முடியாது, கட்டுப்படுத்தவே முடியும் என்று மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர். அதிக பரிசோதனை செய்வதன் மூலம் நோய் தொற்று உள்ளவர்களை கண்டறியமுடிகிறது. மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களின் சிறப் பான பணியால் கொரோனா நோயாளிகள் 56% பேர் நோயில் இருந்து குணமடைந்துள்ளனர். அத்தியாவசிய தேவைகளுக்காக வெளியே செல்லும் மக்கள் கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## கர்ப்பிணி யானையை கொன்ற சம்பவம்: மனித இனம் அழிந்து வருவது இதுபோன்ற சம்பவங்களின் பிரதிபலிப்புதான்; விஜயகாந்த்

கேரள மாநிலத்தில் யானை கொல்லப்பட்ட சம்பவம், மனிதாபிமானத்துக்கு மிகப்பெரிய கேள்விக் குறியாக அமைந்துள்ளது என, தேமுதிக தலைவர் விஜய காந்த் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக, விஜயகாந்த் இன்று வெளியிட்ட அறிக்கை: "கேரள மாநிலம் மலப்புரம் மாவட்டத்தின் வனப்பகுதிக்குள் இருந்து காட்டு யானை ஒன்று பசியுடன் ஊருக்குள் வந்துள்ளது. பசியுடன் தெருவில் சுற்றிய கருவுற்றிருந்த அந்த யானைக்கு அன்னாசி பழத்தில் வெடிமருந்தை வைத்து சிலர் கொடுத்துள்ளன.

அதனை அந்த யானை சாப்பிட்ட போது, அதன் வாயிலேயே வெடிமருந்து வெடித்து பரிதாபமாக உயிரிழந்தது வேதனை அளிக்கிறது. இந்த சம்பவம் மனிதாபிமானத்துக்கு ஒரு மிகப்பெரிய கேள்விக்குறியாக அமைந்துள்ளது. இத்தகைய செயலுக்கு எனது கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், கரோனா போன்ற பல வைரஸ்கள் பரவி மனித இனம் அழிந்து வருவது, இதுபோன்ற சம்பவங்களின் பிரதிபலிப்பாகத் தான் பார்க்கிறேன். யானையை வெடி வைத்துக் கொன்ற அந்த மர்ம நபர்கள் யார் என்பது குறித்து கேரள அரசு கண்டறிந்து, அவர்களுக்கு மிகப்பெரிய தண்டனையை வழங்க வேண்டும். காட்டு யானையை கொன்றது ஒட்டு மொத்த மக்களுக்கும் மன வேதனையை உண்டாக்கியுள்ளது". இவ்வாறு விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

## இந்தியா ஆஸ்திரேலியா இடையே 7 ஒப்பந்தங்கள் கையெழுத்து

இந்தியா ஆஸ்திரேலியா இடையேயான உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மோரிஸன் இந்தியா வரவிருந்தார். ஆனால், உலகம் முழுவதும் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக அவரால் இந்தியாவுக்கு வர முடியாமல் போனது.

இதையடுத்து, இந்திய ஆஸ்திரேலியா இடையேயான உச்சி மாநாடு முதன்முறையாக மெய்நிகர் மாநாடாக நடைபெற்றது. இந்நிலையில், இந்தியாஆஸ்திரேலியா உச்சி மாநாட்டில், ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மோரிசனுடன் பிரதமர் மோடி காணொலி மூலம் ஆலோசனை நடத்தினார். அப்போது பேசிய பிரதமர் மோடி ஒட்டு மொத்த உலகமும் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளது. கொரோனா நெருக்கடி காலத்தை ஒரு வாய்ப்பாக மாற்ற இந்தியா முடிவெடுத்துள்ளது. இந்தியாஆஸ்திரேலியா மெய்நிகர் உச்சிமாநாட்டில் இணைந்ததில் மகிழ்ச்சி அடைகிறேன். கொரோனா பாதிப்பு நிலைமை சீரடைந்தவுடன் குடும்பத்துடன் ஆஸ்திரேலிய பிரதமர் இந்தியா வர வேண்டும் என அழைப்பு விடுத்தார்.

அதனை தொடர்ந்து பொது சீர்திருத்தங்கள், பாதுகாப்பு, முக்கியமான தொழில்நுட்பம் தொடர்பான இரு நாடுகளிடையே 7 ஒப்பந்தகள் கையெழுத்தாகின. குறிப்பாக ராணுவ தளவாடங்களை கையாளும் போது இருநாட்டு ராணுவ தளங்களை பயன்படுத்திக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது, ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் சீனாவை எதிர்கொள்ள உதவும் என பார்க்கப்படுகிறது.

அத்துடன், இரு நாட்டு உறவுகளை ஒரு விரிவான மூலோபாய கூட்டாண்மைக்கு உயர்த்துவது, வெளிநாட்டு விவகாரங்கள் மற்றும் பாதுகாப்பு உரையாடலை அமைச்சரவை மட்டத்திற்கு மேம்படுத்துவது, இந்தோ பசுபிக் கடற்சார் ஒத்துழைப்பை விரிவாக பகிர்ந்து கொள்வது குறித்தும் மெய்நிகர் உச்சி மாநாட்டின் போது முடிவெடுக்கப்பட்டுள்ளன.

# நுவரெலியா உள்ளிட்ட ஐந்து மாவட்டங்களில் தேசிய பல்கலைக்கழகங்களை நிறுவ அரசாங்கம் தீர்மானம்

மாவட்டத்திற்கு ஒரு தேசிய பல்கலைக் கழகத்தை உருவாக்கும் கொள்கையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் திட்டங்களை வகுத்துள்ளதாகவும் முதற்கட்டமாக களுத்துறை நுவரெலியா ஹம்பாந்தோட்டை மாத்தளை காலி மாவட்டங்களில் இந்த ஆண்டில் பல்கலைக்கழகம் உருவாக்கப்படும் என அரசாங்கம் கூறுகின்றது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பு நேற்று அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட அமைச்சரவை இணை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன இதனைக் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில் சகல மாவட்டங்களிலும் குறைந்தபட்சம் ஒரு தேசிய பல்கலைக்கழகத்தை உருவாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

அடுத்த பத்து ஆண்டுகளில் 60 ஆயிரம் மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக்கொள்ளும் கட்டம் கட்டமான வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கவும் உள்ளோம். குறிப்பாக தகவல் தொழில் நுட்பம் பொறியியல் உள்ளிட்ட புதிய 10 கற்கைநெறிகளை உருவாக்கவுள்ளோம்.

இதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியில் இருந்து 50 பில்லியன் அமெரிக்க டொலர்களை பெறவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இந்த ஆண்டில் களுத்துறை நுவரெலியா ஹம்பாந்தோட்டை மாத்தளை காலி ஆகிய மாவட்டங்களில் புதிய பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்படவுள்ளது. அதற்கான அமைச்சரவை அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

அதேபோல் தற்போது இயங்கும் பல்கலைக்கழகங்களிலும் புதிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்காக 600 மில்லியன் நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

# மலையகத்தில் மரணங்கள் சம்பவித்தும் குளவிகளைக் கட்டுப்படுத்த ஆட்கள் இல்லையா?

தோட்டத் தொழிற்துறையில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களை குளவிகள் கொட்டியதால் 10 பேர் கொட்டகலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொட்டகலை பொரஸ்கிறிக் தோட்டத்தில் தேயிலைத் தளிர்கள் கொய்யும் தொழிலில் ஈடுபட்டிருந்த பெண் தொழிலாளர்கள் குளவி கொட்டுக்கிலக்காகியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று 04.06.2020 அன்று மதியம் 12.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. மருத்துவமனையில்அனுமதிக்கப்பட்டிருப்பவர்களில் 10 பேரும் தொடர்ந்தும் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சைபெற்றுவருவதாகவைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

மலையகத்தில் தொடர்ச்சியாக தோட்டத் தொழிலாளர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காவது தொடர்ந்து கொண்டிருக்கின்றது. குளவிக் கொட்டுக்கு இலக்காகி மரணங்களும் சம்பவித்துள்ளன. ஆனால் இது பற்றி அரசாங்கமோ தோட்ட முதலாளிமார் சம்மேளனமோ அக்கறை செலுத்தாமலும் உரிய நடவடிக்கை எடுக்காமலும் உள்ளனர். தொழிற்சங்கங்களும் அக்கறையின்றிஉள்ளன.

# சீன விமானங்கள் அமெரிக்காவில் தரையிறங்க ட்ரம்ப் நிர்வாகம் தடை விதித்தது




அமெரிக்கா மற்றும் சீனாவுக்கு இடையே தொடர்ந்து நிலவி வரும் பதற்றங்களுக்கு மத்தியில் வரும் ஜூன் 16ஆம் தேதி முதல் சீனாவிலிருந்து அமெரிக்காவிற்கு வரும் பயணிகள் விமானங்களுக்கு தடை விதிப்பதாக டிரம்ப் நிர்வாகம் அறிவித்துள்ளது.

கோவிட்-19 நோய்த்தொற்று பாதிப்பில் இருந்து மீண்டெழ தொடங்கியபோதும் அமெரிக்க விமானங்களை தங்களது நாட்டிற்குள் அனுமதிக்காத சீனாவை தண்டிக்கும் வகையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்காவின் போக்குவரத்துறை தெரிவித்துள்ளது.

சமீபத்திய வாரங்களாக கொரோனா வைரஸ் பரவல் மற்றும் ஹாங்காங் விவகாரம் உள்ளிட்டவற்றில் இவ்விரு நாடுகளுக்கிடையே கருத்து வேறுபாடுகள் நிலவி வந்த சூழ்நிலையில் இப்போது விமானப் போக்குவரத்து அடுத்த மோதலாக உருவெடுத்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியிலும் இடைவிடாது குறைந்த எண்ணிக்கையில் சீனா - அமெரிக்கா இடையே பயணிகள் விமானங்களை இயக்கி வந்த ஏர் சீனா சீனா ஈஸ்டர்ன் ஏர்லைன்ஸ் சீனா சதர்ன் ஏர்லைன்ஸ் மற்றும் ஹைனன் ஏர்லைன்ஸ் உள்ளிட்டவற்றின் விமானங்கள் ஜூன் 16ஆம் தேதி முதல் அமெரிக்காவில் தரையிறங்குவதற்கு தடை விதிக்கப்படுவதாக அந்த நாட்டின் போக்குவரத்துத்துறை உத்தரவிட்டுள்ளது.

எனினும் இந்த உத்தரவானது அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்பின் ஒப்புதலுக்கு பிறகே நடைமுறைக்கு வரும்.

வர்த்தகம் கொரோனா வைரஸ் விவகாரம் ஹாங்காங் பிரச்சனை உள்ளிட்டவற்றில் தொடர்ந்து சீனாவுக்கு எதிரான கருத்துகளை தெரிவித்து வரும் டிரம்ப் இதுகுறித்து விரைவில் முடிவெடுப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்க அரசின் இந்த முடிவு குறித்து வாஷிங்டனிலுள்ள சீன தூதரகம் இதுவரை கருத்துத் தெரிவிக்கவில்லை. ஆனால் கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள இந்த நடவடிக்கை அனைத்து விமான சேவை நிறுவனங்களுக்கும் பொருத்தும் என்று முன்னதாக சீன அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது இவ்வாறிருக்க, தமது நாட்டு விமானங்களுக்கு தடைவிதித்த அமெரிக்காவின் முடிவு வருத்தம் அளிக்கிறது: என சீனா தெரிவித்துள்ளது

அமெரிக்கா சீனா விமானங்களுக்கு தடைவிதித்திருக்கும் முடிவு வருத்தம் அளிப்பதாக சீனாவின் வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பாதிப்பு காரணமாக அமெரிக்காவில் இருந்து சீனாவுக்கு இயங்கக்கூடிய 3 விமான நிறுவனங்களும் தங்களது இயக்கத்தை நிறுத்திக் கொண்டன.

மார்ச் மாதத்தில் சீனாவின் விமான ஒழுங்குமுறை ஆணையம் வெளிநாடுகளிலிருந்து இயக்கக்கூடிய விமானங்களுக்கான கட்டுப்பாட்டை விதித்தது. அதன்படி வாரத்துக்கு ஒரு வெளிநாட்டு விமானம் மட்டுமே அனுமதிக்க முடியும் என்ற முடிவை எடுத்தது.

இதற்கிடையே அமெரிக்காவின் டெல்டா ஏர்லைன்ஸ் யுனைடெட் ஏர்லைன்ஸ் விமான நிறுவனங்கள் தங்கள் இயக்கத்தை தொடங்க சீனாவிடம் அனுமதி கோரின. ஆனால் அதை சீனா கண்டுகொள்ளவில்லை.

இதனால் ஆத்திரம் அடைந்த அமெரிக்கா ஜூன் 16-ம் தேதி முதல் சீன நாட்டு விமானங்களை அமெரிக்காவுக்குள் அனுமதிப்பதில்லை. அதேபோல் இங்கிருந்து சீனா செல்வதற்கும் அந்நாட்டு விமான நிறுவனங்களுக்கு அனுமதி கிடையாது என அதிரடியாக அறிவித்துள்ளது இந்நிலையில் சீன விமானங்களை சஸ்பெண்ட் செய்யும் அமெரிக்காவின் முடிவு வருத்தம் அளிக்கிறது என சீனா தெரிவித்துள்ளது. இதுகுறித்து சீனாவின் வெளியுறவுத்துறைக்கான செய்தி தொடர்பாளர் ஜயோ லிஜியன் கூறுகையில் அமெரிக்காவின் நடவடிக்கை எங்களுக்கு வருத்தும் அளிக்கிறது. எனக்குத் தெரிந்தவரை சீனாவின் விமான போக்குவரத்துத் துறை நிர்வாகிகள் அமெரிக்க தரப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்கள்.

போக்குவரத்தை தொடர்வதற்காக விமான போக்குவரத்துத் துறை அமெரிக்காவுடன் மிகவும் நெருக்கமான தொடர்பில் இருந்து வருகிறது. சீனா கொள்கைகளை மாற்றிக் கொள்வதாக அறிவித்துள்ளது. அமெரிக்கா பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான இருதரப்பு முயற்சிகளுக்கு தடைகளை உருவாக்காது என நம்புகிறோம் என்றார்.

# பாரிசில் மீண்டும் ஆரம்பித்துள்ள ஒலி சூழல் மாசடைதல் தொடர்பான பிரச்சனைகள்

உள்ளிருப்புக் காலம் முடிவடைந்து இயல்பு வாழ்க்கை கிட்டத்தட்ட வழமைக்குத் திரும்பியுள்ள நிலையில் பரிசில் மீண்டும் சத்தத்தின் அளவு அதிகரித்துள்ளது என்று அதிகாரிகள் அறிவித்துள்ளார்கள்.

சாலைகளில் அதிகரித்துள்ள வாகனங்களின் எண்ணிக்கை மக்களின் நடமாட்டம் போன்றவை இந்த சத்தம் அதிகரித்தமைக்கான காரணங்களாகும். இதனால் ஒலிகாரணமாக சூழல் மாசடைவது அதிகரித்துள்ளது.

முன்னதாக உள்ளிருப்புக் காலத்தில் சாலைகள் வாகனங்கள் ஏதுமின்றி வெறிச்சோடிக் கிடந்தன. அதனால் சூழல் மாசடைவது முழுமையாகக் குறைந்து பரிசில் சுத்தமான காற்று வீசியது.

ஆனால் தற்போது மீண்டும் சூழல் மாசடைவது முக்கியமாக அதிக ஒலி காரணமாக சூழல் மாசடைவது அதிகரித்துள்ளது என்று இல் து பிரான்ஸ் மாகாண ஒலி ஆய்வு மையத்தின் (centre francilien d'évaluation technique de l'environnement sonore ) தலைவர் குயலெை ஆநைவடஉைமல தெரிவித்துள்ளார்.

மக்களின் இயல்பு வாழ்க்கை இன்னமும் முழுமையாக வழமைக்குத் திரும்பாத நிலையில் சூழல் மாசடைவு அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

Family Health Team

# Carefirst Family Health Team

## Accepting New Patients



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

**Clinic Location:**

**Carefirst One-Stop Multi Services Centre**

300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2

Tel: (416) 502-2029, www.carefirstfht.com




# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

# கோவிட்-19 பரவலைத் தடுக்க நாம் ஒன்றாக இணைந்து மாற்றத்தை உருவாக்குகிறோம்

வணிகங்களும் பணியிடங்களும் மீண்டும் திறக்கப்படுகையில், நாம் அனைவரும் தொடர்ந்து அனைவரின் பாதுகாப்புக்காக நமது பங்களிப்பை அளிக்கவேண்டும்.




சமூக இடைவெளியைக் கடைபிடிப்போம். மற்றவர்களிடமிருந்து இரண்டு மீட்டர்கள் தள்ளியிருப்போம்



உடல்ரீதியான இடைவெளி கடினமாக இருந்தால், முகக்காப்பு அணிவோம்



கைகளை நன்றாகவும் அடிக்கடியும் கழுவுங்கள்

மேலும் விபரங்களுக்கு **ontario.ca/coronavirus** தளத்துக்கு வருகை தருக

ஒன்டாரியோ அரசாங்கத்திற்காக ஒன்டாரியோ அரசாங்கத்தால் வழங்கப்பட்டது

Ontario

# நாடாளுமன்ற தேர்தலில் தமிழரசுக் கட்சியின் கூடடணி எட்டு ஆசனங்களைப் பெறுவது சந்தேகம் என்கிறார்கள் ஆய்வாளர்கள்



எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கூட்டு எட்டு ஆசனங்களை கூட பெறுவது சந்தேகமென ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சியாக அடிகளை வாங்கி வரும் கூட்டமைப்பின் பலவீனங்களை மக்களுக்கு தெளிவுபடுத்தி தேர்தலில் பலமுனைத் தாக்குதல் இம்முறை இடம்பெறவுள்ளது.

இத்தாக்குதலில் இருந்து தமிழரசு தாக்குப்பிடிக்குமா என்ற கேள்வி ஆய்வுகள் மூலம் வெளிவந்துள்ளது.

இதன் பிரகாரம் பதினாறிலிருந்து எட்டுக்கு எனும் கணக்கில் ஆசனங்களை கூட்டமைப்பு பெறவுள்ள நிலையில் தேசியப்பட்டியலில் இரண்டு ஆசனங்கள் கிடைப்பதும் இம்முறை சந்தேகத்திற்கிடமாகியுள்ளது.

# யாழ்ப்பாணம் அல்வாயில் 2 வயதுச் சிறுமி கடத்தப்பட்டார் தாயார் பொலிசில் முறைப்பாடு

வடமராட்சி - அல்வாய் பகுதியில் நேற்று இரவு ஆர்கலி என்ற 2 வயது சிறுமி கடத்திச் செல்லப்பட்டுள்ளார். இது தொடர்பில் சிறுமியின் தாயார் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சிறுமி உணவருந்திக் கொண்டு இருந்ததாகவும், அப்போது மின்சாரம் தடைப்பட்ட நிலையில் சிறுமியின் அழுகுரல் கேட்டு தாய் ஓடி வந்துள்ளார். இதன்போது குழந்தையை காணவில்லை எனவும், சிலர் மதிலால் கடந்து சென்றதை பார்த்ததாகவும் தாயார் முறைப்பாடு செய்துள்ளார்.

குழந்தையின் தாயும், தந்தையும் கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து வாழ்கிறார்கள். இந்த கடத்தலில் தந்தையின் தரப்பினர் தொடர்பு பட்டிருக்கலாம் என்று சந்தேகம் எழுவதாகவும் தாயார் கண்ணீருடன் குறிப்பிட்டுள்ளார்.


# யாழ்ப்பாணம் மாதா சிலையை சேதப்படுத்தியவர் மனநிலை பாதிக்கப்பட்டவராம்



யாழ்ப்பாணம் - மூன்றாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள அடைக்கல மாதா தேவாலயத்தின் திருச்சொரூபத்தின் கை மற்றும் கண்ணாடிக் கூண்டை உடைத்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர், மனநலம் குன்றியவர் என பொலிஸார் தெரிவித்தனர் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் நடைபெற்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இ வ ர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் யாழ்ப்பாணம் பொலிஸார் குறிப்பிட்டனர்.

# சுவாசிப்பதைப் பலாத்காரமாகத் தடுத்து ஜோர்ஜ் பிளோய்டை கொலை செய்த அமெரிக்கப் பொலிஸார் நால்வரும் நீதி மன்ற விசாரணைகளுக்கு முகம் கொடுக்கவுள்ளார்கள்





கடந்த வாரம் அமெரிக்காவில் மினியாபொலிஸ் என்னும் இடத்தில் பொலிசாரால் கைது செய்யப்பட்ட நிலையில் இயல்பாக சுவாசிப்பதை தடுத்தும் நிலத்தில் கிடத்தி துன்புறுத்தியும் கொலை செய்யப்பட்ட ஜொர்ஜ் பிளேய்ட் என்னும் கறுப்பின நபரைக் கொலை செய்தார்கள் என்னும் குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட நான்கு பொலிசார் எதிர்வரும் நாட்களில் பல குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் நீதி மன்ற விசாரணைகளுக்கு முகம் கொடுக்கவுள்ளார்கள் என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

குற்றஞ்சாட்டப்பட்ட நான்கு பொலிசாரில் முதலாமவர் னுநசநம ஊாயரஎயெ .கொல்லப்பட்ட ஜொர்ஜ் பிளேய்ட் என்னும் கறுப்பின நபரைக் கழுத்தில் தனது முழங்காலால் அமுக்கி அவரது மரணத்திற்கு பிரதான காரணமாக இருந்தார் என்றும் ஏனைய மூன்று பொலிஸாரான யுடநஓயனெநச முரநபெ, வுாழஅயள டுயநெ யனெ வுழர வுாயழ ஆகியோர் முதலாமவருக்கு அருகில் நின்றவண்ணம் அவருக்கு ஆதரவான செயற்பாடுகளில் உதவினார்கள் என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளார்கள்.

தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ள இந்த நால்வருக்கும் எதிரான புதிய குற்றச்சாட்டுக்கள் நீதி மன்றத்தால் முன்வைக்கப்பட்டுள்ளன என்றும் அரச சட்டத்தரணியான கீத் தெரிவித்தார்.

மேற்படி கொலைச் சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து அமெரிக்காவின் பல பகுதிகளிலும் பொலிஸாருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களும் தனியார் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த சம்பவங்களும் தொடர்ந்து இடம் பெற்று வரும் இந்த நேரத்தில்

இந்த நான்கு பொலிஸாருக்கும் எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் விடயமாக நீதி மன்றம் விரைவில் கூடும் என்றும் எனினும் இந்த நால்வருக்கும் பிணைவழங்குவதானால் இலட்சக் கணக்கான டாலர்கள் செலுத்த வேண்டிவரும் எனவும் இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ள கொலைக்குற்றச்சாட்டுகளுக்கு குறைந்தது 40 வருட சிறைத்தண்டனை வழங்கவும் சட்டத்தில் இடம் உள்ளதாகவும் அரச சட்டததரணி குறிப்பிட்டுள்ளார்.

# மலையக மக்களின் உடனடித் தேவை ஒரு தேசிய தலைவர்

## மனந் திறந்து எழுதுகின்றார் பிரபல பத்திரிகையாளர் வி. தேவராஜ்



இ.தொ.கா. பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் மறைந்துவிட்டார்.

மலையகத்தலைமைகளில் ஓரளவு பேசப்பட்ட ஒருவரின் மரணம் நிகழ்ந்துள்ளது.

ஜனாதிபதி முதல் பல்வேறு அரசியல் தலைவர்களும் அவரது மரணம் குறித்து ஒருவிடயத்தை சுட்டிக்காட்டியுள்ளனர். துணிச்சல் மிக்க மலையகத் தலைவர் என்பதுதான் அந்த வார்த்தை.

ஏன் மலையகத் தலைமைகள்கூட இந்த வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளனர். தற்போதைய தேசிய மற்றும் மலையக சூழலில் இந்த மரணம் நிகழ்ந்திருக்கக்கூடாது என்பதே இந்த மரணம் குறித்து என்னுடன் பகிரப்பட்ட கருத்தாடல்களின் தொகுப்பாக உள்ளது.

கிங் மேக்கர் உருவாகி விடக்கூடாது மலையகத்திலிருந்து மலையகத்திலும் இலங்கையின் தேசிய அரசியலிலும் ஒரு கிங் மேக்கர் உருவாகி விடக்கூடாது என்பது தென்னிலங்கை பேரினவாத சக்திகளின் நிலைப்பாடும் . நிகழ்ச்சி நிரலுமாகும்.

இந்த நிகழ்ச்சி நிரலை உடைத்துக்கொண்டு மேலெழுந்தவர்தான் மறைந்த இ.தொ.கா. தலைவர் சௌமிய மூர்த்தி எஸ்.தொண்டமான் அவர்கள். மலையக அரசியல் தொழிற்சங்க வரலாற்றிலும் தேசிய அரசியலிலும் அவர் இதனை சாதித்துக்காட்டினார்.

மலையகத்தின் அரசியல் அடையாளம் சௌமிய மூர்த்தி தொண்டமான் மலையக மக்கள் தொழிற்சங்க ரீதியில் பிளவுபட்டிருந்தபோதும் அரசியலில் மக்களை ஓரணியில் திரட்டி வெற்றி கண்டவர் அவர்.

தொழிற்சங்க ரீதியில் பிளவுபட்டிருந்த போதும் மக்கள் மலையகத்தின் அரசியல் அடையாளமாக சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்களையே மனதில் பதித்துக்கொண்டனர்.

மலையக மக்களின் அரசியல் தொழிற்சங்க பலமே மலையக மக்களின் உரிமைகளை பெற்றுக்கொள்வதற்கான பயணத்தில் மறைந்த சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்களால் வெற்றிகளைக்குவிக்க முடிந்தது.

பலரை நாடாளுமன்றம் அழைத்துச் சென்றார் தனி ஒருவராக 1977 இல் நாடாளுமன்றம் நுழைந்த அவர் தோட்டத் தொழிலாளர்கள் உட்பட பலரை நாடாளுமன்றம் அழைத்துச் சென்றார்.

தனி ஒருவராக மலையக மக்களின் பிரஜாவுரிமை கல்வி என பல்வேறு துறைகளின் உரிமைகளை மலையக மக்களால் அனுபவிக்கக்கூடியதாக இருந்தது.

அவர் பெற்றுக்கொடுத்த உரிமைகளில் நின்றுகொண்டு அந்த உரிமைகளை அனுபவித்துக்கொண்டு சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்களை விமர்ச்சித்துக்கொண்டுமலையகமக்களைபலிக்கடாவாக்கிக்கொண்டிருக்கின்றன இன்றைய மலையகத் தலைமைகள்.

இன்றைய இந்த தலைமைகள் கூறுகின்ற சாதனைகளையும்விட ஆபத்துக்களே அதிகமாக உள்ளன தென்னிலங்கை ஆட்சியாளர்களுக்கு சிறுபான்மை இனத்தவர்களில் இருந்து மேல் எழும் மக்கள் தலைவர்கள் தேவையில்லை. சிறுபான்மை இனத்தவர்களில் வாக்குகளை சேகரிக்கும் முகவர்களும் கேள்வி கேட்பாரின்றி ஆட்சியாளர்களுக்கு முண்டு கொடுப்பவர்களுமே தேவை.

ஆதற்கு சன்மானமாக நோட்டுக்கள். வசதி வாய்ப்பகள்.இவைகளை தாராளமாக வழங்குவதற்கு சிங்கள ஆட்சியாளர்கள் தயாராக இருப்பர்.அதாவது இவ்வாரானவர்களை வைத்துக் கொண்டு ஒட்டு மொத்த சமூகத்தையும் நலமடிப்பதே இவர்களது நிகழ்ச்சி நிரலாகும்.

தமிழனுக்கு எதிரி தமிழனே என்பது போல ஒரு பக்கம் பேரினவாதச் சக்திகள் சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்களை வீழ்த்திவிட காய்களை நகர்த்திக்கொண்டிருந்போது மறுபுறம் அவர் விழ்ந்தால் தமக்கு அரசியல் தொழிற்சங்க வாழ்வென எண்ணி பேரினவாத சக்திகளுடன் கை கோர்த்து பயணித்தன மலையகத் தலைமைகள்.

இறுதியில் பேரினவாதிகளும் மலையக சக்திகளும் கை கோர்த்து பயணித்து மலையத்திற்கு தோல்வியை தந்தனர்.

சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் மறைவு இயற்கையின் நியதி என்றபோதும் அவரது மரணம் சம்பவத்திருக்கக்கூடாது என்று மலையகம் மாத்திரமல்ல ஒட்டு மொத்த தமிழர் தரப்பும் அவ்வேளையில் எண்ணியது.

சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்கள் சுகயீனமுற்று அட்டன் கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஒரு மணித்துளிகளுக்குள் ஒரு பேரினவாத அமைப்பிடம் இருந்து எனக்கு ஒரு தொலை பேசி அழைப்பு வந்தது. அப்போது வீரகேசரியில் பணியாற்றிக்கொண்டிருந்த நேரம். தொண்டமானின் நிலைமை எவ்வாறு உள்ளது என்று சிங்களத்தில் கேட்டது அந்தக் குரல். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சிகிச்சை நடைபெறுகின்றது என்று கூறினேன்.

தொடர்ச்சியாக அவர்கள் தொலை பேசியில் அதே கேள்வியை கேட்டுக் கொண்டிருந்தனர். இறுதியாக அவரைக் கொழும்புக்கு கொண்டுவருவதற்கான ஆயத்தங்கள் நடைபெறுவதாகக்கூறினேன்.

மீண்டும் அதை அழைப்பு எனது பதிலும் அதுவாகவே இருந்தது. அந்த பதிலுடன் மறுமுனையில் இருந்து விசாரித்த குரல் (அபிட்ட அராஞ்சிவுனே அனித் பெத்த) என்று கூறியது.

அதாவது எங்களுக்கு வேறுவிதமாக தகவல் கிடைத்தது. அவர் மரணித்துவிட்டார் என்றது அந்தக் குரல். எனக்கு அது பற்றி தெரியாது என்று கூறினேன். அந்தளவுக்கு சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்களது மரணத்தை பேரினவாத அமைப்புக்கள் எவ்வளவு ஆவலுடன் எதிர்பார்த்துக்காத்திருந்தன. என்பதற்காகவே இதனை இங்கு பதிவிடுகின்றேன்.

மறைந்த ஆறுமுகன் தொண்டமான் சௌமிய மூர்த்தி தொண்டமான் அளவுக்கு மலையக அரசியலிலும் தொழிற்சங்கத்துறையிலும் சாதனைபடைக்காவிட்டாலும் கூட மலையக தொழிற்சங்க அரசியல் மற்றும் பேரினவாத சக்திகள் மத்தியில் ஒருபேசுபொருளாக இருந்துள்ளார் என்பதை மறுப்பதற்கில்லை.

ஒன்று மறைந்த சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்களது பேரன் என்பதும் அவரிடம் இயல்பாகவே குடிகொண்டிருந்த அசாத்திய துணிச்சல். எந்த விடயத்திலும் திடீர் முடிவுகளை எடுத்து காரியத்தில் இறங்குதல் போன்றன அவருக்குரிய விசேட பண்புகளாக இருந்தன.

இந்த பண்புகளே அவரைப் பேசுபொருளாக்கியது.மலையகத்தில் உள்ள இன்றைய தலைமைகளிடம் இல்லாத இந்த பண்பு அவரை மக்கள் மத்தியில் பேச வைத்தது.

இது மலையகத் தலைமைகள் பலருக்கு ஜீரணிக்க முடியாத எரிச்சல் ஊட்டுவதாக அமைந்தது.

மலையகத்தில் கேள்வி கேட்பாரற்றநிலையும் உச்ச அரசியல் தொழிற்சங்க வாழ்வு முழுமையாக கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்த்திருக்கும் மலையக சக்திகளுக்கு இது சவாலாக இருந்தது. வேண்டுமானால் வாய்ச்சவாலாடாக ஆறுமுகன் எமக்கு ஒரு பொருட்டே இல்லை எனக்கூறலாம்.

ஆனால் அண்மைக்கால அரசியல் தொழிற்சங்க வரலாற்றுப்பதிவுகள் தேசிய அரசியலில் மலையகத்தின் மாற்றுத் தலைமைகளின் நகர்வுகள் அனைத்தையும் உன்னிப்பாக கவனித்தால் இந்த உண்மை புலனாகும்.

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் இருக்கும்வரை அவரை வைத்து பேசியே தொழிற்சங்க அரசியலை அன்றைய மலையகத் தலைமைகள் செய்தன. இதனையே இன்றைய மலையகத் தலைமைகளும் ஆறுமுகத்தை வைத்தே தொழிற்சங்க அரசியலை நடத்தினர் என்பதையும் மறுப்பதற்கில்லை.

சௌமியமூர்த்தி தொண்டமான் மறைந்தார். அந்த வெற்றிடத்தை இன்றுவரை எந்தஒரு மலையகத் தலைமைகளாலும் நிரப்ப முடியவில்லை.

அதேபாணியில் இன்றைய மலையக தலைமைகளும் பயணிப்பது மலையகத்துக்கு சாபக்கேடு என்பதை மலையக தலைமைகள் இனியாவது உணர வேண்டும்.

ஆளுக்கு ஆள் தூற்றுவதும் வசைபாடுவதுமே மலையக அரசியலாக உள்ளது.இவ்வாறு ஆளுக்காள் தூற்றி வசைபாடி அரசியல் தொழிற்சங்கம் செய்வது என்பது உங்களது வயிற்றுப்பிழைப்புக்காகவே அன்றி எங்களது பிரச்சினையைத் தீர்ப்பதற்கல்ல. திசை திருப்புவதற்கென மலையகத்தின் குரல்கள் ஊடகவாயிலாக வெளிவருவதை மலையக தலைமைகாளான நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

மலையகத்தலைமைகளே இதற்கு இன்றுடன் முற்றுப்புள்ளி வையுங்கள். இ.தொ.கா. பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் மறைந்து விட்டார்.

இனிமேல் மலையகத்தலைமைகளாகிய உங்களுக்கு எதிர்ப்பு அரசியல் நடத்த வேண்டிய அவசியம் இருக்காது.

முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகரும் தலைவருமான அ்ரப் அமைச்சராக இருந்தபோது அவர் தனது அமைச்சில் வைத்து முஸ்லிம்களுக்கு பல உதவிகளை செய்தார். பலர் அவரது உதவிகளைப் பெற்று அவருக்கு நன்றி தெரிவித்து சென்றனர். உதவி பெற வரிசையில் நின்றவர் அ்ரப் அவர்களிடம் உங்களிடம் உதவி பெற வந்தேன் ஆனால் நான் முஸ்லிம் காங்கிரஸ்காரன் அல்ல என்றார். அதற்கு அ்ரப் நீங்கள் முஸ்லிம் காங்கிரஸ் காரனாக இருக்கத் தேவையில்லை. ஒரு முஸ்லிமாக இருந்தால்போதும். உதவியைப் பெற்றுச்செல்லுங்கள் என்று கூறினார்.

மலையகத் தலைமைகளே நீங்கள் அமைச்சாரக இருங்கள் அல்லது நாடாளுமன்ற மாகாண சபை உறுப்பினரகளாக இருங்கள். இந்த பதவி அந்தஸ்துக்குக்ப்பால் நீங்கள் ஒரு மலையகத்தவன்.என்பதை மனதில் இருத்திக் கொள்ளுங்கள்.

நீங்களே உங்களை நீங்கள் சார்ந்த தொழிற்சங்க இரும்புக்கவசத்தால் மூடிக்கொள்ளாதீர்கள். அந்தக் கவசத்தை தூக்கி எறிந்து முழு மலையகத்துக்குமானவனாக உங்களை அர்ப்பணியுங்கள்.

1988 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் கள நிலவரத்தை ஆராய்வதற்காகவும் செய்தி சேகரிப்பதற்காகவும் மாத்தளை பன்விலைப் பகுதிக்குச் சென்றிந்தேன்.

மக்கள் உற்சாகமாக சென்று சுறுசுப்பாக வாக்களிப்பில் கலந்துகொண்டனர். வாக்களித்து விட்டு வந்த ஒரு தொழிலாளியிடம் வாக்களிப்புபற்றி வினவினேன். நாங்கள் எல்லோரும் காலையிலேயே வாக்களித்துவிட்டோம் என்றார்.

இந்த தோட்டத்தில் எந்த எந்த தொழிற்சங்கள் உள்ளன என்று வினவினேன்.

பொதுவாக எல்லாத் தொழிற்சங்கங்களும் உள்ளன. ஆனால் நாங்கள் அரசியலில் தொண்டமான் ஐயா சொல்வதைத்தான் கேட்போம். நான் மாற்றுத் தொழிற்சங்கம் ஆனால் நான் அவர் சென்னபடிதான் வாக்களிப்பேன் என்றார்.

தொழிற்சங்க பேதங்களை மீறி அரசியல் ரீதியில் மலையகத்தை சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்களால் ஒன்றிணைக்க முடிந்தது.

இதுதான் அவரது வெற்றியாகவும் மலையகத்தின் வெற்றியாகவும் அமைந்தது. மலையகத் தலைமைகளே நீங்கள் ஏன் ஒரு தொண்டமானாக. ஒரு அ்ரப்பாக சிந்தித்து செயற்பட முடியாது. உங்களால் முடியும் அதுதான் மலையகத்தின் வெற்றியாக அமையும்.

மலையகத்தின் தேசிய தலைவராக மட்டுமன்றி தேசிய அரசியலிலும் செல்வாக்கு செலுத்த முடியும். மலையக மக்களுக்கு தேவை ஒரு தேசிய தலைவர்.

மக்களின் எதிர்பார்ப்பும் அதுதான்.

*வி. தேவராஜ்*

# தடை பல வந்தாலும் சர்வதேசம் எங்களைக் கைவிடாது என்ற நம்பிக்கையோடு அடுத்த கட்டத்துக்குத் தமிழ்மக்கள் நகர வேண்டும்!

நக்கீரன் -கனடா

ஆங்கில மொழியில் ஒரு சொற்றொடர் உண்டு. ஒரு வயதுவந்த நாய்க்கு புதிய தந்திரங்களைக் கற்பிக்க முடியாது (You can't teach an old dog new tricks) என்பதுதான் அந்தச் சொற்றொடர். அதாவது ஒருவருக்கு புதிதாக ஒன்றைக் கற்பிப்பது வில்லங்கமானது. வழக்கமாக ஒருவர் நீண்ட காலமாக சில விடயங்களை ஒரு குறிப்பிட்ட வழியில் செய்து வருவதால் அவற்றைப் புதிதாக வேறு வழிகளில் அந்த விடயங்களைக் கற்றுக்கொள்ள மிகவும் பிடிவாதமாக இருப்பார்.

மகிந்த இராசபக்ச தனது ஐம்பது ஆண்டு நாடாளுமன்ற அரசியல் பயணத்தை அண்மையில் கொண்டாடி இருக்கிறார். 1970 இல் நாடாளுமன்றத்துக்குத் தனது 25 ஆவது அகவையில் தெரிவு செய்யப்பட்ட அவர் அமைச்சர், பிரதமர், சனாதிபதி எனப் பல பதவிகளை வகித்தவர். 1977 இல் நடந்த நாடாளுமன்றத்துக்கு நடந்த தேர்தலிலும் பின்னர் 2015 இல் நடந்த சனாதிபதி தேர்தலில் மகிந்த இராசபக்ச தோற்றாலும் தென்னிலங்கை அரசியலில் அசைக்க முடியாத சிங்கள - பவுத்த மக்களின் கதாநாயகனாக விளங்குகிறார். பண்டாரநாயக்க குடும்ப அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்து இராசபக்ச குடும்ப அரசியலுக்கு அத்திவாரம் இட்டுள்ளார்.

கடந்த மே 04 இல் மகிந்த இராசபக்ச முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் ஒன்றை கொழும்பில் கூட்டியிருந்தார். அதனை முக்கிய எதிர்க்கட்சிகள் புறக்கணித்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதில் கலந்து கொண்டது. கூட்ட முடிவில் திரு சம்பந்தன் மற்றும் ததேகூ இன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவரோடு தமிழ்மக்கள் எதிர்நோக்கும் காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, வலிந்து காணாமல் போனோர் போன்ற பல சிக்கல்கள் பற்றி உரையாடினார்கள்.

மே 04 இல் சனாதிபதி மாளிகையில் நடைபெற்ற கூட்டத்தை எதிர்க்கட்சிகளுடன் இணைந்து ததேகூ புறக்கணிக்கும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அக்கூட்டத்தில் திரு சம்பந்தன் தலைமையில் தமிழ் மக்களின் நலன் கருதியும், நாட்டின் நலன் கருதியும் கூட்டமைப்பினர் பங்கேற்றது மகிந்த இராசபக்சவை மகிழ்ச்சிப் படுத்தியிருந்திருக்க வேண்டும்.

இதனையடுத்து மறுநாள் மே 5 அன்று மகிந்த இராசபக்ச அவர்களுக்கும் ததேகூ உறுப்பினருக்கும் இடையில் பேச்சு வார்த்தை தொடர்ந்தது.

பேச்சு வார்த்தை முடிவில் "தமிழ் மக்கள் பிரச்சினைக்குப் படிப்படியாகத் தீர்வு காணப்படும் எனப் பிரதமர் மகிந்த இராசபக்ச உறுதியளித்தார். மேலும் அவர் கூறுகையில், "சனாதிபதி மாளிகை மற்றும் தனது இல்லத்தில் நடைபெற்ற சந்திப்பு திருப்திகரமாக இருந்தது, தமிழ் தேசிய கூட்டமைப்பினர் முன் வைத்த கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு வருகிறது, அவைகளில் பெரும்பாலானவை தமிழ் மக்களுக்கு சார்பாகவே உள்ளது. தமிழ் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்கு படிப்படியாக தீர்வு காணப்படும்" என உறுதியளித்தார்.

மேலும் "புதிய நாடாளுமன்றத்தில் புதிய அரசமைப்புத் தொடர்பாக, தமிழ் மக்களின் தீர்வு தொடர்பில் பேசுவோம் என்று கூட்டமைப்பை அண்மையில் சந்தித்தபோது உறுதி யளித்துள்ளேன். எனவே, புதிய அரசில், எல்லோரும் இலங்கை மக்கள் என்ற அடிப்படையிலேயே தீர்வை வழங்குவோம். வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள், மலையகத் தமிழர், முஸ்லிம்கள் என்று பிரித்துப் பார்த்து தீர்வை வழங்கமாட்டோம்" என்றும் கூறியிருக்கிறார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பினர் தனது அழைப்பை ஏற்றுத் தன்னை வந்து சந்தித்ததாகவும் இதனை எதிர்க்கட்சியை சேர்ந்த சிலர் விமர்சிப்பதாகவும் தெரிவித்த இராசபக்ச, "அரசியல் இலாபத்துக்காக அவர்கள் அவ்வாறு விமர்சிக்கிறார்கள் என்பது வெளிப்படையாக தெரிகிறது, நாடாளுமன்ற தேர்தலில் அவர்களுக்கு உரிய பதிலை மக்கள் வழங்க வேண்டும்" எனவும் தெரிவித்தார்.

வழக்கம் போல தங்களை அதிதீவிர தமிழ்த் தேசியவாதிகளாக காட்டிக் கொள்ளும் பிறேமச்சந்திரன், சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன், ஆனந்தசங்கரி போன்றோர் மகிந்த இராசபக்சவுடன் ததேகூ நடத்திய பேச்சு வார்த்தைகளைக் கடுமையாக விமர்ச்சித்திருந்தார்கள். ( http://asiantribune.com/node/93988 )

"தமிழ்த் தலைவர்கள் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிடவில்லை. அதனைக் கைவிடவேண்டும் என்று நீங்கள் (மகிந்த) அண்மையில் தெரிவித்திருந்தீர்கள். ததேகூ தனிநாட்டுக் கோரிக்கை யைக் கைவிட்டுவிட்டோம் என்று பகிரங்கமாகத் தெரிவித்துள்ளது. இப்போதும் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைக்கும் தமிழ்த் தலைவர்கள் என்று யாரைக் குறிப்பிடுகின்றீர்கள்''? என்று பிரதமர் மகிந்தவிடம் ஊடகம் ஒன்று எழுப்பப்பட்ட கேள்விக்கு "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வடக்கு,



கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு ஒரு மாகாணம் ஆக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் சமஷ்டிக் கோரிக்கையையும் ததேகூ கைவிடவேண்டும்" என்று வலியுறுத்தினார்.

பிரதமர் மகிந்த இராசபக்சவின் பதில் தமிழ்மக்களின் அடிப்படை சிக்கல்களான அதிகாரப் பகிர்வு, வட - கிழக்கு இணைப்பு இரண்டிலும் மகிந்த இராசபக்ச அவர்களது நிலைப்பாடு துளியும் மாறவில்லை என்பதை ஒரு மாதம் கழித்து அவர் பேசிய பேச்சில் இருந்து தெளிவாகத் தெரிகிறது.

1987 இல் இராசீவ் காந்தி - ஜே.ஆர். ஜெயவர்த்தனா இருவருக்கும் இடையில் 1987ம் ஆண்டு ஆடி மாதம் 29 ஆம் திகதி (29.07.1987) உடன்பாடு ஒன்று எழுதப்பட்டது. அந்த உடன்பாட்டில் -

1) வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அங்கு ஏனைய இனக்குழுக்களுடன் எல்லாக் காலத்திலும் ஒன்றாக வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுப்பூர்வமான வாழ்விடங்கள் என்பதை அங்கீகரிப்பது,

2) சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படும் வரை தற்போதுள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஒரு மாகாண சபையை உள்ளடக்கிய ஒரு நிர்வாக அலகாக இருக்கும். இத்தகைய அலகில் ஓர் ஆளுநர், ஒரு முதலமைச்சர், ஓர் அமைச்சரவை ஆகியன செயற்படும்.

2006 ஆம் ஆண்டு வட - கிழக்கு இணைப்புக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணி தொடுத்த வழக்கில் வழக்கில் வட - கிழக்கு இணைப்பை அரசிதழ் மூலம் இணைப்பது சட்ட வலுவற்றது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால் அந்த இணைப்பை சட்டப்படி செய்யலாம் என உயர் நீதிமன்றம் கூறியது. வடக்கையும் கிழக்கையும் இணைக்க முடியாது என உயர் நீதிமன்றம் கூறவில்லை.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக எழுதப்பட்ட இந்திய - இலங்கை உடன்பாட்டிற்கான சட்ட வடிவம் நொவெம்பர் 14,1987 அன்று இலங்கை நாடாளுமன்றம் இயற்றிய 13 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டது.

13 ஆவது திருத்தத்தின் ஒரு முக்கிய கூறு இரு மாகாணங்கள் விரும்பினால் ஒன்றாக இணைந்து கொள்ளலாம் என்பது. இந்த அடிப்படையிலேயே வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்து ஒரே தமிழ் மாகாணம் ஒன்று நிறுவப்பட்டு 1988 இல் ஒரு தேர்தலும் நடத்தப்பட்டது. கிழக்கு மாகாணத்தில் ஒரு கருத்துக் கணிப்பு மேற்கொள்ளப்பட்டுப் பின்னர் இந்த இணைப்பு நிரந்தரமாக்கப்படும் என்பது 13 ஆவது திருத்தத்தின் முக்கிய கூறாகும்.

மேலும் மே 19, 2009 இல் போர் முடிந்த பின்னர் மே 25 இல் இலங்கைக்கு வருகை தந்த அன்றைய ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் அவர்களுக்கு இதே மகிந்த இராசபக்ச இனச் சிக்கலுக்குத் தீர்வாக 13 ஏ சட்ட திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என இருவரும் ஒருமித்து விட்ட அறிக்கையில் ஒப்புக் கொண்டிருந்தார்! (https://www.un.org/press/en/2009/sg2151.doc.htm)

தமிழர்களது போராட்ட வரலாற்றில் இந்திய - இலங்கை உடன்பாடும் அதனைத் தொடர்ந்து கொண்டுவரப்பட்ட 13 ஏ சட்ட திருத்தமும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்திய அரசின் நேரடித் தலையீடு காரணமாகவே இது சாத்தியமாயிற்று.

13 ஏ இல் காணப்படும் சில உறுப்புக்கள் இந்திய அரசியல் யாப்பில் இருந்து வரிக்கு வரி பார்த்து எழுதப்பட்டனவாகும். இப்போது ஆளுநருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை மாகாண சபையின் அமைச்சர் வாரியத்துக்குக் கொடுக்கப்பட்டிருந்தால் இலங்கையின் அரசமைப்பு இணைப்பாட்சிக்கான குணாம்சங்களைக் கொண்டிருக்கும்.

கடந்த நாடாளுமன்றத்தில் பாதியில் கைவிடப்பட்ட அரசியலமைப்பு வரைவில் ஆளுநருக்குரிய அதிகாரங்கள் அமைச்சர் வாரியத்துக்கு வழங்கப் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத் தக்கதாகும்.

மகிந்த இராசபக்ச ததேகூ வட - கிழக்கு இணைப்பை மட்டுமல்ல சமஷ்டிக் கோரிக்கையையும் கைவிட்டுவிட்டு வரவேண்டும் எனக் கூறுகிறார். அவரைப் பொறுத்த மட்டில் அல்ல சிங்கள - பவுத்த பேரினவாதிகளின் நிலைப்பாடும் சமஷ்டி என்றால் பிரிவினை - தனிநாடு என்றே பொருள் கொள்கிறார்கள்.

கடந்த மாதம் மே 8 ஆம் நாள் சுமந்திரனை சிங்களத்தில் நேர்காணல் கண்ட சமுதித்த சமரசேகர என்ற ஊடகவியலாளர் கீழ்வரும் கேள்விகளைக் கேட்டிருந்தார்.

சமுதித்த: நாங்கள் எல்லோரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

சுமந்திரன்: ஒன்றாக இருக்க வேண்டும். அதே நேரத்தில் அனைத்து இனங்களுக்கும் உரிமையோடு வாழக் கூடிய தன்மை இருக்க வேண்டும். அரசியல் பலத்தை அனைவரும் பாவிக்கக் கூடியதாக இந்த அரசியல் இருக்க வேண்டும்.

சமுதித்த: அப்படியானால் தேசிய கூட்டமைப்பு ஏன் சமஷ்டி வேண்டும் என்று கேட்கிறது?

சுமந்திரன்: சமஷ்டி முறையைத்தான் நாங்கள் கேட்கிறோம். சமஷ்டி முறையால்தான் அனைத்து இனங்களுக்கும் ஆள உரிமை கிடைக்கும் எனும் உறுதி இருக்கிறது.

சமுதித்த: அதாவது இன்னொரு நாடு.

சுமந்திரன்: இல்லை! சமஷ்டி என்பது இன்னொரு நாடு என்பதல்ல.

சமுதித்த: சமஷ்டிஎன்பது இன்னொரு நாடு. சமஷ்டி என்றதும் நாடு பிரிந்தது என்றுதான் அர்த்தம்?

சுமந்திரன்: அமெரிக்காவில் இருப்பதும் சமஷ்டி முறை. ஆஸ்திரேலியாவில் இருப்பதும் சமஷ்டி முறை. கனடாவில் இருப்பதும் சமஷ்டி முறை. ஐரோப்பிய நாடுகளில் பலவற்றில் இருப்பதும் இந்த சமஷ்டி முறை. அவை எல்லாம் வேறு வேறு நாடுகள் என்று யாரும் சொல்வதில்லை. அவை அனைத்தும் பலமான நாடுகள். அப்படி இருப்பதால்தான் அந்த நாடுகள் பலமாக இருக்கின்றன.

மகிந்த இராபச்சவின் அரசியல் நிலைப்பாடு தமிழர் - சிங்களவர்களுக்கு இடையில் உள்ள இன முரண்பாட்டைப் பேசித் தீர்க்கலாம் என்ற நம்பிக்கையை மழுங்கடித்துள்ளது.

இதனால் வட மாகாண சபைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் போன்றவர்கள் "சிங்களத் தலைவர்கள் எவராக இருந்தாலும் - அது மகிந்தவாகவோ, இரணிலாகவோ, ஜெயவர்த்தனவாகவோ இருக்கலாம் - எவரொருவரும் எங்களுக்குத் தீர்வை இணங்கித் தருவார்கள் என்று எமக்கு நம்பிக்கை இல்லை. அவர்கள் அப்படித் தருவார்கள் என்று எந்தக் காலத்திலும் நாம் எதிர்பார்க்கவும் முடியாது'' என்று கூறியிருக்கிறார். "அவரது கூற்று முற்றிலும் சரியானது. அதுதான் நாம் கற்றுக் கொண்டுள்ள படிப்பினை" என வேறு சிலர் வழிமொழிகிறார்கள்.

இந்தப் பின்னணியில் ததேகூ இன் தலைவர் திரு சம்பந்தன் ஒருவர்தான் நம்பிக்கை தருமாறு பேசிவருகிறார்.

"சர்வதேசம் எங்களைக் கைவிடாது என்று நம்புகின்றோம். சர்வதேசம் எங்களைக் கைவிடாமல் செயற்படுவதற்குத் தேவையான அழுத்தங்களைக் கொடுக்கின்றோம். கொடுத்துக்கொண்டு இருக்கின்றோம். எனவே, உண்மையின் அடிப்படையில் நீதியின்அடிப்படையில் நியாயத்தின் அடிப்படையில் சமத்துவத்தின் அடிப்படையில் தமிழருக்கு ஒரு தீர்வு கிடைப்பதை சனாதிபதி கோட்டாபய இரசபக்ச, மகிந்த இராசபக்ச இருவராலும் தடுக்கமுடியாது. எவராலும் தடுக்க முடியாது" என்கிறார்.

அதே நேரம் "சனாதிபதி கோட்டாபய இராசபக்சவையோ அல்லது அவர் தலைமையிலான அரசையோ வெருட்டி - மிரட்டித் தீர்வு பெற முயற்சிப்பது பயனற்றது. இதைத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் புரிந்துகொள்ள வேண்டும்" என இராசபக்ச அரசின் பேச்சாளரும் முன்னாள் அமைச்சருமான கெஹலிய இரம்புக்வெல தெரிவித்துள்ளார். இலங்கை அரசை மீறி சர்வதேசம் எதையும் செய்ய முடியாது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இருந்தும் அடுத்த ஆண்டு ஜெனீவாவில் நடக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் ஐக்கிய இராச்சியம், கனடா உட்பட ஐந்து நாடுகள் இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஒன்றைக் கொண்டுவர இருக்கின்றன. ஒரு கதவு மூடப்பட்டால் இன்னொரு கதவு திறக்கப்படும் என்பது ஒரு பொது விதி.

தடை பல வந்தாலும் சர்வதேசம் எங்களைக் கைவிடாது என்ற நம்பிக்கையோடு அடுத்த கட்டத்துக்குத் தமிழ்மக்கள் நகர வேண்டும்!

# ஈழத்துத் திருக்கோவில்கள் 899



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
416-332-0269 vasantha@rogers.com



## செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோயில்

### – மட்டக்களப்பு –

“வாழும் படியொன்றும் கண்டுகொண்டேன் மனத்தேயொருவர்
வீழும்படியன்று விள்ளும் படியன்று வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டும் எட்டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே

உயிர்கொல்லி நோயாய் உலகெங்கும் பரவியுள்ள கொரானா வைரசிலிருந்து தப்பி உயிர்வாழக் கையாள வேண்டியவை:

1. சமூக இடைவெளி
2. கைகளை அடிக்கடி கழுவுதல்
3. தேவையற்று வெளியே செல்லுதல்
4. அரசின் ஆணையை ஏற்று வீட்டில் இருப்பது

இந்த நான்கு நெறிமுறைகளுமே உயிர்களைப் பலிகொள்ளும் கொரானா என்ற கொடிய வைரசை ஒழிக்க உதவும் நடைமுறைகளாகும். இந்த நான்கு நடைமுறைகளையும் அனைவரும் பின்பற்றி நலமுடன் வாழ்வோம்.

நாமும் நலம்பெற்று, உலகமக்களும் நலமே வாழ, ஆத்மசுத்தியோடு இறைவனைப் பிரார்த்திப்போம். சிவவழிபாட்டிலே நோய் பிணி மற்றும் மரணத்தை வெல்லும் மந்திரமாக மகா ம்ருத்தும்ஜெய மந்திரம் கூறப்பட்டுள்ளது. இறைவனை வழிபடும்பொழுது தினமும் இந்த மந்திரத்தை ஒரு முறையோ அன்றி பலமுறையோ காலை, மாலை வேளைகளில் கூறி, இந்த உலகத்தைப் பீடித்துள்ள நோய் பிணி நீங்கி அனைவரும் நலம்பெற்று வாழ வேண்டும் என்ற வேண்டுதலை முன்வைத்து, இறைவனை வழிபடவேண்டும். நிச்சயம் பலன் கிடைக்கும்.

மகா ம்ருத்தும்ஜெய மந்திரம்

ஓம் த்ரியம்பகம் யஜாமஹே
ஸுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருஹமிவ பந்தனாத்
ம்ருத்யோர் முஷ்ய மாம்ருதாத்”
ஓம் நமச்சிவாய ஓம்நமச்சிவாய ஓம்நமச்சிவாய.

வைகாசி மாதத்தில் பூரணையில்வரும் திங்கட்கிழமையன்று திருக்குளிர்த்தி இடம்பெறும்வகையில், வெள்ளிக்கிழமை கதவு திறக்கப்படும். “வருடம் ஒருமுறை வைகாசித்திங்களில் வருவேன்” எனக் கண்ணகி கூறியதற்கமைய, பூரணையை விட பூரணையை அண்மிய திங்கட்கிழமைக்கே இங்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. ஏழு சடங்குகளும் தனித்தனியே முக்கியத்துவமும் சிறப்பும் உடையனவாக விளங்குகின்றன. இவை தவிர கதவு திறத்தல், கலியாணச்சடங்கு, பூரணகும்பச்சடங்கு, பூரணகும்பத்துநெல், குளிர்த்திச் சடங்கு, குளிர்த்தி ஏடு படித்தல், எட்டாம் சடங்கு, சித்திரைச் சடங்கு, கார்த்திகை விளக்கீட்டுச்சடங்கு, தைக்குளிர்த்தி போன்றவையும் செட்டிபாளையம் கோயிலிலே சிறப்பாக நடைபெறும்.

பொதுவாக ஆலயங்களிலே நித்திய, நைமித்திய பூசைகள் இடம்பெறுவது வழக்கம். ஆனால் கண்ணகி அம்மன் கோயில்களில் நித்தியபூசை நடைபெறுவதில்லை, வருடம் முழுவதும் இக்கோயில்கள் பூட்டப்பட்டுக் காணப்படும். கண்ணகி கோயில்களிலே நடைபெறும் வருடாந்தச் சடங்கிற்காக வைகாசியில் கதவு திறக்கப்படுவதையே கதவு திறத்தல் என்னும் சடங்காகக் கொண்டாடுவர். கண்ணகி சடங்கின் ஆரம்பமே கதவுதிறத்தல் ஆகும். ஞாயிற்றுக்கிழமை பகலில் நடைபெறும் இச் சடங்கில், கோயிலின் நான்காம் மண்டபத்துள் இருக்கும் ஒரு தடிக்குச் சேலை கட்டிப் பெண்உருவமாக அமைப்பார்கள். இப்பெண் உருவத்தையே கண்ணகி அம்மனாகப் பாவனை செய்வர். இச்சடங்கிலன்று மூலத்தானத்துள் பதின்மூன்று கும்பங்கள் வைக்கப்படும். கலியாணக்காலுக்கு முன்பாக ஐந்து கும்பங்கள் ஞாயிற்றுக்கிழமை இரவுச் சடங்கிலே வைக்கப்படும். கலியாணக்காலின் முன்பு வைக்கப்படும் கும்பங்கள் நெற்குவியலின்மீதே நிறுத்தி வைக்கப்படுகின்றன. இதற்குச் சுமார் நான்கு புசல் நெல் தேவைப்படும். திங்கட்கிழமை பின்னிரவு, பறவைகள் பூமியில் இறங்குவதற்கு முன், குளிர்மையானவேளையில் கண்ணகி அம்மனை மனங்குளிரவைக்கும் சடங்கினைச் செய்வர். மதுரையை எரித்த கண்ணகியின் மார்பிலே வெண்ணெய், தயிர் ஆகியன பூசி மனங்குளிரும்படி செய்வதே திருக்குளிர்த்தியாகும்.

ஆலயம் அமைப்பதற்கு நிலையம் அமைத்துக் கொடுத்ததோடு, அடிக்கல் நாட்டவேண்டிய சுபநேரத்தை அறிவிப்பதற்குக் கடலிலே பெரிய வெடிச்சத்தம் கேட்கும் எனவும், அவ்வேளையில் பூசைசெய்பவரே கல்வைக்கவேண்டும் என அம்மன் கட்டளையிட்டாராம். இவ்வாறு எழும் சத்தத்தினைக் கேட்டு அறிவிப்பதற்கென்று கடற்கரையிலிருந்து அம்மன் கோவில்வரை பாதையொன்று திறக்கப்பட்டதாகவும், களுதாவளை தொடக்கம் கிரான்குளம் வரையுள்ள மக்கள் இச்சத்தம் கேட்டு அறிவிப்பதற்கு வரிசையில் நின்றதாகவும், வெடிச்சத்தம் கோயிலடியில் நின்ற ஒரு சிலருக்கு மட்டுமே கேட்டதாகவும் கூறுவர். இக்காரணத்தினாலேயே இந்த ஊர்கள் செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோவிலுடன் நெருங்கிய தொடர்பு கொண்டனவாகக் காணப்படுகின்றன.

*வளரும்...*

# யாழ்ப்பாணத்தில் பொன் சிவகுமாரனின் நினைவு தினம் பிரதேச சபையினால் அனுஷ்டிக்கப்படுகின்றது



போராட்டத்தின் முதல் வித்து பொன் சிவகுமாரனின் 44வது ஆண்டு நினைவு தினம் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு அனுஸ்டிக்கப்படவுள்ளதாக வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

உரும்பிராய் மண்ணின் மைந்தனான பொன் சிவகுமாரன் 1974 ஆம் ஆண்டு யூன் 5 ஆம் திகதி உரும்பிராய் பகுதியில் பொலிசாரின் சுற்றிவளைப்பில் சயனட் அருந்தி மாலை 6.15 மணிக்கு வீரச்சாவடைந்தார். அவரின் திருவுருவச்சிலை உரும்பிராய் சந்தியில் அமையப்பெற்றுள்ளது.

இச் சிலை வளாகத்தில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பொது அஞ்சலிக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தற்போதைய கெரோனா சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு சகலரும் அஞ்சலி செலுத்துமுகமாகவே சனிக்கிழமை ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இம்முறை உரைகள் எதுவும் இடம்பெறமாட்டாது. அதேவேளை உரிய சுகாதார பாதுகாப்பு ஏற்பாடுகள், சமூக இடைவெளியுடன் அஞ்சலி செலுத்துவதற்கான ஏற்பாடுகளை வலிகாமம் கிழக்கு பிரதேச சபை மேற்கொண்டுள்ளது. ஏற்கனவே குறித்த அஞ்சலிசெலுத்தல் இடம்பெறும் பகுதியில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் தொற்று நீக்கியும் தெளிக்கப்பட்டுள்ளது. கலந்துகொள்பவர்கள் முகக்கவசங்களை அணிந்திருப்பது கட்டாயமானதாகும்.

அகவணக்கத்தினைத்தொடர்ந்து பொது ஈகைச்சுடரினை பொன் சிவகுமாரனின் குடும்பத்தினரும் அதனைத் தொடர்ந்து மலர் வணக்கம் செலுத்துதல் என்பன இடம்பெறும்.



Preparation of Income Taxes
T1 and T2 with E/File

Location :
Unit 9- 40 Winges Road
Woodbridge, ON
L4L 6B2

Pearl Fortune Canada
Head Office
101 Laird Drive, Markham,
Ontario L3S 3N6
Office Number 905-554-5606
Fax Number 905-554-3236



Please contact:
Yo K Gamar ( C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993

# அன்பின் தொனி - 563

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபத்தின் வல்லமை**

**ஜெபத்திற்கு என் செவிகள் கவனிக்கிறவைகளுமாயிருக்கும்.**

இவ்விதமாய் சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தையும் ராஜ அரமனை-யையும் கட்டித் தீர்த்தான், கர்த்தருடைய ஆலய த்திலும் தன் அரமனையிலும் சாலொமோன் செய்ய மனதாயிருந்ததெல்லாம் அநுகூலமாயிற்று. கர்த்தர் இரவ-ிலே சாலொ மோனுக்குத் தரிசனமாகி: நான் உன் விண்ணப்பத்தைக் கேட்டு, இந்த ஸ்தலத்தை எனக்குப் பலியிடும் ஆலயமாகத் தெரிந் துகொண்டேன். நான் மழையில்லாதபடிக்கு வானத்தை அடைத்து, அல்லது தேசத்தை அழிக்க வெட்டுக்கிளிகளுக்குக் கட்ட ளையிட்டு, அல்லது என் ஜனத்திற்குள் கொள்ளைநோயை அனுப்பும்போது, என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்க ளைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பி னால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு ஷேமத் தைக்கொடுப்பேன். இந்த ஸ்தலத்திலே செய்யப்படும் ஜெபத்திற்கு, என் கண்கள் திறந்தவைகளும், என் செவிகள் கவனிக் கிறவைகளுமாயிருக் கும். என் நாமம் இந்த ஆலயத்தில் என்றென்றைக்கும் இருக்கும்படி, நான் இதைத் தெரிந்துகொண்டு பரிசுத்தப்படுத்தி னேன், என் கண்களும் என் இருதயமும் எந்நாளும் இங்கே இருக்கும். உன் தகப்பனாகிய தாவீது நடந் ததுபோல, நீ எனக்கு முன்பாக நடந்து, நான் உனக்குக் கற்பித்தபடியெல்லாம் செய்து, என் கட்டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொள்வாயானால், அப்பொழுது இஸ்ரவேலை அரசாளும் புரு'ன் உனக்கு இல்லாமற்பொவதில் லை என்று நான் உன் தகப்பனாகிய தாவீதோடே உடன்படிக்கைபண்ணினபடியே, உன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை நிலைக்கப்பண்ணு வேன். நீங்கள் வழிவிலகி, நான் உங்களுக்கு முன்வைத்த என் கட்டளைகளையும் என் கற்பனைகளையும் விட்டுப்போய், வேறே தேவர்களைச் சேவித்து, அவர்களைப் பணிந்துகொள்வீர்களேயாகில், நான் அவர்களுக்குக் கொடுத்த என் தேசத் தில் இருந்து அவர்களைப் பிடுங்கி, என் நாமத்திற்கென்று நான் பரிசுத்தப்படுத்தின இந்த ஆலயத்தை என் சமுகத்தி னின்று தள்ளி, அதை எல்லா ஜனசதளங்களுக்குள்ளும் பழமொழியாகவும் வசைச்சொல்லாகவும் வைப்பேன். அப்பொழுது உன்னதமாயிருக்கிற இந்த ஆலயத்தைக் கடந்துபோகிறவன் எவனும் பிரமித்து கர்த்தர் இந்தத் தேசத்திற்கும் இந்த ஆலயத்திற்கும் இப்படிச் செய்தது என்ன என்று கேட்பான். அதற்கு அவர்கள்: தங்கள் பிதாக்களை எகிப்து தேசத் திலிருந்து புறப்படப்பண்ணின தங்கள் தேவனாகிய கர்த்தரைவிட்டு, வேறே தேவர்களைப் பற்றிக்கொண்டு, அவைகளை நமஸ்கரித்து, சேவித்தபடியினால், கர்த்தர் இந்தத் தீங்கையெல்லாம் அவர்கள்மேல் வரப்பண்ணினார் என்று சொல்லுவார்கள் என்றார்.

**- 2 நாளாகமம் 7: 11-22**

**நான் உங்கள் நடுவிலே தேவனாயிருப்பேன்,**

நீங்கள் உங்களுக்கு விக்கிரகங்களையும் சுரூபங்களையும் உண்டாக்காமலும், உங்களுக்குச் சிலையை நிறுத்தாமலும், சித்திரந்தீர்ந்த கல்லை நமஸ்கரிக்கும்பொருட்டு உங்கள் தேசத்தில் வைக்காமலும் இருப்பீர்களாக, நான் உங்கள் தேவனா கிய கர்த்தர். என் ஓய்வுநாட்களை ஆசரித்து, என் பரிசுத்த ஸ்தலத்தைக்குறித்துப் பயபக்தியாயிருப்பீர்களாக, நான் கர்த்தர். நீங்கள் என் கட்டளைகளின்படி நடந்து, என் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்தால், நான் ஏற்ற காலத்தில் உங்களுக்கு மழை பெய்யப்பண்ணுவேன், பூமி தன் பலனையும், வெளியிலுள்ள மரங்கள் தங்கள் கனியையும் கொடுக்கும். திராட்சபபழம் பறிக்குங் காலம் வரைக்கும் போரடிப்புக் காலம் இருக்கும், விதைப்புக் காலம்வரைக்கும் திராட் சப்பழம் பறிக்குங் காலம் இருக்கும், நீங்கள் உங்கள் அப்பத்தைத் திருப்தியாகச் சாப்பிட்டு, உங்கள் தேசத்தில் சுகமாய்க் குடியிருப்பீர்கள். தேசத்தில் சமாதானம் கட்டளையிடுவேன், தத்தளிக்கப்பண்ணுவார் இல்லாமல் படுத்துக்கொள்வீர்கள், நான் உங்கள்மேல் கண்ணோக்கமாயிருந்து, உங்களைப் பலுகவும் பெருகவும்பண்ணி, உங்களோடே என் உடன்படிக்கை யைத் திடப்படுத்துவேன். நான் உங்கள் நடுவிலே உலாவி, உங்கள் தேவனாயிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்.

**நீங்கள் எனக்குச் செவிகொடாதிருந்தால், ஏழத்தனை வாதையை உங்கள்மேல் வரப்பண்ணுவேன்**

நீங்கள் எனக்குச் செவிகொடாமலும், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றின்படி செய்யாமலும், என் கட்டளைகளை வெறுத்து உங்கள் ஆத்துமா என் நியாயங்களை அரோசித்து, என் கற்பனைகள் எல்லாவற்றின்படியும் செய்யாதபடிக்கு, என் உடன் படிக்கையை நீங்கள் மீறிப்போடுவீர்களாகில்: நான் உங்களுக்குச் செய்வது என்னவென்றால், கண்களைப் பூத்துப் போகப் பண்ணுகிறதற்கும், இருதயத்தைத் துயரப்படுத்துகிறதற்கும், திகிலையும் ஈளையையும் காய்ச்சலையும் உங்களுக்கு வரப்பண்ணுவேன், நீங்கள் விதைக்கும் விதை விருதாவாயிருக்கும், உங்கள் சத்துருக்கள் அதின் பலனைத் தின்பார்கள். நான் உங் களுக்கு விரோதமாக என் முகத்தைத் திருப்புவேன், உங்கள் சத்துருக்களுக்கு முன்பாக முறிய அடிக்கப்படுவீர்கள், உங்கள் பகைஞர் உங்களை ஆளுவார்கள், துரத்துவார் இல்லாதிருந்தும் ஓடுவீர்கள். இவ்விதமாய் நான் உங்களுக்குச் செய்தும்ம், இன்னும் நீங்கள் எனக்குச் செவிகொடாதிருந்தால், உங்கள் பாவங்களினிமித்தம் பின்னும் ஏழத்தனையாக உங்களைத் தண்டித்து, உங்கள் வல்லமையின் பெருமையை முறித்து, உங்கள் வானத்தை இரும்பைப்போலவும், உங்கள் பூமியை வெண்கலத்தைப்போலவும் ஆக்குவேன். உங்கள் பெலன் விருதாவிலே செலவழியும், உங்கள் தேசம் தன் பலனையும், தேசத்தின் மரங்கள் தங்கள் கனி-களையும் கொடுக்கமாட்டாது. நீங்கள் எனக்குச் செவிகொடுக்க மனதில்லாமல், எதிர் த்து நடப்பீர்களானால், நான் உங்கள் பாவங்களுக்குத்தக்கதாக இன்னும் ஏழத்தனை வாதையை உங்கள்மேல் வரப்பண் ணி, உங்களுக்குள்ளே வெளியின் து'டமிருகங்களை வரவிடுவேன், அவைகள் உங்களைப் பிள்ளையற்றவர்களாக்கி, உங்கள் மிருகஜீவன்களை அழித்து, உங்களைக் குறைந்துபோகப்பண்ணும், உங்கள் வழிகள் பாழாய்க் கிடக்கும். நான் செய்யும் தண்டனையினால் நீங்கள் குணப்படாமல், எனக்கு எதிர்த்து நடந்தால், நான் உங்களுக்கு எதிர்த்து நடந்து, உங்கள் பாவங்களினிமித்தம் ஏழத்தனையாக வாதித்து, என் உடன்படிக்கையை மீறினதற்குப் பழிவாங்கும் பட்டயத்தை உங்கள் மேல் வரப்பண்ணி, நீங்கள் உங்கள் பட்டணங்களில் சேர்ந்தபின், கொள்ளைநோயை உங்கள் நடுவ-ிலே அனுப்புவேன், சத்துருவின் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவீர்கள். உங்கள் அப்பம் என்னும் ஆதரவுகோலை நான் முறித்துப்போடும்போது, பத்து ஸ்திரீகள் ஒரே அடுப்பில் உங்கள் அப்பத்தைச் சுட்டு, அதைத் திரும்ப உங்களுக்கு நிறுத்துக்கொடுப்பார்கள், நீங்கள் சாப்பிட்டும் திருப்தியடையமாட்டீர்கள். இன்னும் இவைகளெல்லாவற்றாலும் நீங்கள் எனக்குச் செவிகொடாமல், எனக்கு எதிர்த்து நடந்தால், நானும் உக்கிரத்தோடே உங்களுக்கு எதிர்த்து நடந்து, நானே உங்கள் பாவங்களினிமித்தம் உங்களை ஏழத்தனையாய்த் தண்டிப்பேன்.

**- லேவியராகமம்ம 26: 1-228**

பயணத் தொடர் - பகுதி-31

# பனி பொழியும் தேசத்தில் பத்து நாட்கள்

(முனைவர் வே, சங்கரநாராயணன், சேலம், தமிழ்நாடு)



அக்டோபர் 8ம் தேதி (2019) நிகழ்வுகள் ஏதும் வைத்துக் கொள்ளாமல், கனடா தமிழ் சமூகத்தின் முக்கிய பிரமுகர்களை சந்தித்து நன்றி கூறி விடை பெறுவதற்காக அந்த நாளை ஒதுக்கி இருந்தோம். அந்த வகையில் நண்பர் சங்கர் நல்லதம்பியை சந்தித்து விடைபெற்ற கையோடு, மற்றுமொரு தமிழ் ஆளுமையை சந்த்திப்பதற்காக அவர் தங்கியிருந்த விடுதி அறைக்கு நண்பர் லோகேந்திரலிங்கத்துடன் சென்றேன். சென்னையில் வாழும் அவரைப் பற்றி நான் நிறைய கேள்விப் பட்டிருந்தாலும், அவரை முதன் முதலாக நேரில் சந்தித்து உரையாடியதும், நட்புக் கொண்டதும் கனடாவில் தான். அவர்தான் அன்பு நண்பர் ஜெ. செல்வகுமார். உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவரும், உலகத்தமிழ் வர்த்தக சங்கத்தின் தலைவருமான ஜெ. செல்வக்குமாரைத்தான் அங்கு நான் சந்தித்தேன்.

சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் உலகத் தமிழ் வம்சாவளி அமைப்புக்கு 52 நாடுகளில் கிளைகள் உண்டு. உலக அளவில் உள்ள தமிழர்களை ஒரே குடையின் கீழ் ஒருங்கிணைக்கும் பணி-களை இந்த அமைப்பு மேற்கொண்டு வருகிறது. தமிழ்க் கலாசாரம், பண்பாடு, பாரம்பரியம், உணவு, உடை உள்ளிட்டவற்றைப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்வதுதான் இதன் முக்கியப் பணி. உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பில் மனிதவள மேம்பாட்டுப் பிரிவு என்ற பிரிவும் இயங்குகிறது. ஆண், பெண் இருபாலருக்கும் தனித்தனியாக இருக்கும் இந்த அமைப்பின் நோக்கமே, படிக்கும் காலத்திலேயே இளைஞர்களை தற்சார்புடைய தொழில் முனைவோராக உருவாக்கும் விதத்தில் அவர்களுக்குப் பயிற்சிகள் அளிப்பதுதான். இந்த அமைப்பின் ஆற்றல் மிக்க தலைவராகச் செயல் பட்டு வருபவர் திரு. செல்வகுமார். வம்சாவளித் தமிழர்களின் ஒன்று கூடல் நிகழ்வினை ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் சிறப்பு மிக்க பாரம்பரியத் திருவிழாவாக ஆண்டுதோறும் நடத்தி வருகிறார். இதில் உலகெங்கிலும் உள்ள சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், சபாநாயகர்கள், மத்திய அமைச்சர்கள், மேயர்கள், தொழிலதிபர்கள், அறிவியலாளர்கள், கல்வியாளர்கள், கலை, கலாச்சாரம், மின்னியல், மின்னணுவியல் வல்லுநர்கள், சமூக மற்றும் ஊடகத்துறை சார்ந்தவர்கள் போன்ற ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொள்வது வழக்கம். இந்த ஆண்டு துவக்கத்தில் நடந்த இவ்விழாவில் மேதகு தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித் கலந்து கொண்டு பல்துறை விருதுகளையும் வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. அதே போல ஒவ்வொரு ஆண்டும் நண்பர் செல்வ குமார் திரைத் துறை சாதனையாளர்களை கவுரவிக்கும் விதத்தில் "எடிசன் அவார்ட்ஸ்" என்ற நிகழ்வினையும் நடத்தி வருகிறார். உலக சினிமாவின் தந்தை என அழைக்கப்படும் தாமஸ் ஆல்வா எடிசன் பெயரால் இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன. இதிலும் ஆண்டுதோறும் ஏராளமான திரைத்துறை முன்னணி நடிகர்கள், நடிகைகள், இயக்குனர்கள், இசையமைப்பாளர், ஒளிப்பதிவுக் கலைஞர்கள் கலந்து கொண்டு சிறப்பிப்பது வழக்கம்.

அண்மையில், சுவிட்சர்லாந்து நாட்டில், ஜெனீவா நகரத்தில், ஐக்கியநாடுகள் அவையில், ஐக்கிய நாடுகள் மன்றத்தின் 43 வது கூட்டத் தொடரில் மனித உரிமைகளுக்காக இவரது குரல் ஒலித்திருக்கிறது. அக்கூட்டத் தொடரில் பங்கு கொண்டு அவர் பேசுகையில் உலகின் மூத்த மொழியான தமிழ் மொழியும் அதன் கலை, கலாச்சாரம், போன்றவையும், கடல் கடந்த நாடுகளிலும் பரவ ஐக்கிய நாடுகள் அவை ஆவன செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். உலக மக்கள் அனைவரும் அவரவர் தாய்மொழிக் கல்வியை கட்டாயம் கற்க மனித உரிமைகள் பேரவை உதவி செய்ய வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

நண்பர் செல்வகுமாரை அவர் தங்கியிருந்த அறையில் நானும் நண்பர் லோகேந்திரலிங்கமும் சந்தித்தோம். நீண்ட நேரம் உரையாடி மகிழ்ந்தோம். அவரையும், என்னையும் நண்பர் லோகேந்திரலிங்கம் அங்காடி வீதிக்கும் அழைத்துச் சென்றார். இருவருக்கும் கனடா பயணத்தின் நினைவூட்டல்களாக பரிசுப் பொருட்களை வாங்கி கொடுத்தார். கனடாவில் எனக்கு அறிமுகமான உயர்ந்த தமிழ் ஆளுமைகளில் நண்பர் செல்வகுமார் முக்கியமானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து கனடாவிற்கு வருகை தந்து இங்கு பல பரதநாட்டிய அரங்கேற்றங்கள் மற்றும் நடன மேடையேற்றங்கள் ஆகியவற்றில் தனது கலை சார்ந்த பங்களிப்பு மற்றும் மேற்பார்வை ஆகிய பணிகளைச் செய்து தாயகம் திரும்பும் "கலை-லமாமணி" சாகிர் உசேன் அவர்களை பியர்சன் வி-மான நிலையத்தில் சந்தித்து நானும் நண்பர் லோகேந்திர லிங்கமும் வாழ்த்துக் கூறி வழியனுப்பி வைத்தோம். பிரபல நடன ஆசிரியை ஜெனனி குமார், அவரது புதல்வி தாமீரா குமார், மற்றும் மொன்றியால் வாழ் எழுத்தாளர் வீணை மைந்தன் சண்முகராஜாவும் அதன்போது உடனிருந்தார்கள்.



தொடர்ந்து மாலை ஸ்காபுரோவில் உலகத் தமிழ்பண்பாட்டு கழகத்தின் அகிலத் தலைவர் வி.துரைராஜா, வட அமெரிக்க பிராந்தியத்திற்கான தலைவர் சிவா கணபதிப் பிள்ளை, மற்றும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் சர்வதேச பிரச்சாரப் பொறுப்பாளரும் ஈஸ்ட் எப்.எம். வானொலி நிலைய அதிபருமான நடா ராஜ்குமார் ஆகியோரைச் சந்தித்து விடை பெற்றேன். அவர்களும் சிறிது நேரம் எனது தமிழ் உரை கேட்டு பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டனர். உலகத்தமிழ் பண்பாட்டுக் கழகத்தின் சார்பாக அன்பளிப்புகளை வழங்கி மகிழ்ந்தனர். நண்பர் நடா ராஜ்குமார் உருவத்தைப் போலவே உள்ளமும் உயர்ந்த ஒரு ஊடகவியலாளர். கனடாவில் ஒரு சில நிகழ்ச்சிகளில் அவரோடு நானும் ஏற்கனவே பங்கு கொண்டிருந்தேன். அவரது வேண்டுகோளுக்கிணங்க கீ-தவாணி மற்றும் ஈஸ்ட் எப்.எம். வானொலிகளில், நேரலைகளில் உதயன் விழா பங்கேற்பு குறித்த எனது பேட்டிகளையும் அவர் வெளியிட்டிருந்தார். அவரிடமும் நன்றி கூறி விடைபெற்றேன்.

*(வளரும்)*



# அம்மா
## Amma Pawn Broker

## தங்க நகை அடைவு மாடம்

கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்று முழுக் காப்புறுதி
செய்யப்பட்ட முதன்மையான அடைவுச்சேவை



உங்கள் பழைய
நகைகளை அதியுயர்
பெறுமானத்திற்கு எம்மிடம்
விற்றுக்கொள்ளலாம்

1.5% முதல்
2.0%
வட்டி மட்டுமே
(per month)

416-757-0034
416-994-3861

உங்கள் நகைகளுக்கு அதிகூடிய பெறுமதியையும்
மிகக்க குறைந்த வட்டி வீதத்தையும் பெற்றுக்கொள்ள
நகரின் மத்தியில் ஒரே நிறுவனம்

105A - 2425 Eglinton Ave. E, Scarborough
ammapawnbroker@gmail.com
கடைக்குப் பின்புறத்தில் போதிய வாகனத் தரிப்பிடங்கள் உண்டு
Shankar& Co. வுக்கு அருகாமையில்

எவ்வளவு தொகையானாலும்
மிகக் குறைந்த வட்டியுடன்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

நம்பிக்கை | நாணயம் | உத்தரவாதம்

# கேரளா மூலிகை மருத்துவம்

## வைத்திரயர் - சஞ்சீவ ராஜூ

பரம்பரை மூலிகை வைத்தியசாலை
பதினொரு பரம்பரையாக நாடி பார்த்து உங்களது உடம்பிலிருக்கும் நோய்களைக் கண்டறிந்து அதற்கேற்ற மருந்துகளை தருகின்ற வைத்தியர் பரம்பரையைச் சேர்ந்த சஞ்சீவ ராஜூ இந்தியா முதல் மலேசியா, சிங்கப்பூர், பிரான்ஸ், ஜேர்மன், லண்டன், ஆஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு சென்று மருத்துவம் செய்த பின் தற்போது கனடா வந்துள்ளார்.

பல இடங்களில் மருத்துவம் செய்து நம்பிக்கை இழந்து விட்டீர்களா? கவலைப் பட வேண்டாம். பக்க விளைவுகளற்ற தகுந்த மருந்துகளைப் பெற்று உங்கள் வருத்தங்கள் குணமாக ஒரு முறை நம்மிடம் வாருங்கள். நல்ல தீர்வு பெற்றுச் செல்லுங்கள். இலவச ஆலோசனை வழங்கப்படும்.





வேர், பச்சை இலைகள், பட்டைகள், கிழங்குகளில் இருந்து பெறப்பட்டு பொடியாக, கசாயமாக, குளிசைகளாக, லேகியமாக இந்த இயற்கை மருந்துகள் தரப்படும்.
எந்தவித பக்க விளைவுகளும் கிடையாது! நம்பி வாருங்கள்!
நலமுடன் வாழுங்கள்!

ஆஸ்துமா, அலர்ஜி, மூச்சுத்திணறல், தும்மல், நெஞ்சுச்சளி, தோல் வியாதி சொறியாஸிஸ், முடக்குவாதம், மூட்டு வலி, வயிற்றுவலி, இடுப்பு வலி, முதுகு வலி, கை-கால் வலி, கழுத்துவலி, ஒற்றைத் தலைவலி, பக்க வாதம், நரம்புத் தளர்ச்சி, நீரழிவு (சர்க்கரை வியாதி), சிறுநீரகக்கற்கள், வாய்வுத் தொல்லைகள், குடற் புண், இரத்த பலம் அபிவிருத்தி, ஆண்களுக்கான பிரச்சனைகள், ஆண்மைக் குறைவு, உடல் பருமன்-குறைக்க, கூட்டுவதற்கு, முடி உதிர்தல், ஞாபக மறதி, உள்மூலம், வெளிமூலம், பகந்திரி மூலம், கால் வெடிப்பு, மஞ்சட்காமாலை, வெண்குஷ்டம், பெண்களுக்கான மாதவிடாய்ப் பிரச்சனை, நெஞ்செரிதல், மலச்சிக்கல், செக்ஸ் பிரச்சினை, மன அழுத்தம், காக்கா வலிப்பு, ஞாபக மறதி, சரவாங்கி போன்ற நோய்களை மூலிகை வைத்தியம் மூலம் குணப்படுத்த முடியும். அத்துடன் கர்ப்பப்பை கோளாறுகள், குழந்தையின்மைக்கான மருத்துவத்துடன், சகல நோய்களுக்கும் சிகிச்சை செய்யப்படும். அத்துடன் போதைப் பொருட்களை உட்கொள்ளும் பழக்கத்தை மறப்பதற்கான மருந்துகளும் தரப்படும்.

2900 MARKHAM ROAD, MajesticCity UNIT L 13 ,
OPP. VASANTHAM SUPER MARKET, MARKHAM RD,
SCARBOROUGH, ON, M1X 1E6

647-294-3189

MEGA Financial Group
Ruban Lingam
Insurance Agent
Call:647-928-5626
PH28 - 4168 Finch Ave, East
Scarborough, ON M1S 5H6
Web: www.rubanlingam.com
Email: rubanlingam@hotmail.com

தமிழ் பேசும் இளம் சட்டத்தரணியான
அரவிந் ஜெகதீசன் அவர்களை
அழைப்பதன் மூலம் உங்கள்
வழக்குகள், தொழில் சம்பந்தமான பிரச்சனைகள்,
வீட்டு உரிமையாளர்கள் - குடியிருப்பாளருக்கு
இடையிலான வழக்குகள் ஆகியவை தொடர்பான
ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
437.229.9643

• Employment Law • Wrongful Dismissal
• Severance Packages • Human Rights
• Landlord and Tenant Law • Employment Standards
Aravinth Jegatheesan
Barrister and Solicitor
437.229.9643
ARAVINTH LAW

வீடு வாங்க விற்க
Vijay Muthumani
Sales Representative
HomeLife Today
Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated.
Off: 416-298-3200
Dir 647-963-0705

23rd Years in Publishing

UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Tel : 416-752-1524
Fax: 416-752-6703

NEW CLASS STARTING
On12th October 2019
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services

ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
PARK PLAZA
1646 VICTORIA PARK AVE., SUITE 1
(BETWEEN LAWRENCE & EGLINTON)
TORONTO, ON. M1R 1P7
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

மொன்றியல் நகரில்
உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயம் 1261 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 5, 2020

# அமெரிக்காவில் ஜோர்ஜ் புளொய்ட் கொல்லப்பட்டதையடுத்து இனவாதத்திற்கு எதிராக கருத்துத் தெரிவித்த டூறம் பிராந்திய பொலிஸ் தலைமை அதிகாரி



அமெரிக்காவில் மட்டுமல்ல, கனடாவிலும் இனவாதம் மற்றும் நிறபேதம் ஆகியன இன்னும் பின்பற்றப்பட்டு வருகின்றன. எனவே இங்கு எம்மைச் சுற்றி இருக்கும் கறுப்பின நண்பர்கள் மற்றும் ஏனைய இனத்தவர்கள் ஆகியோரோடு இணைந்து இனவாதத்திற்கும் நிறபேதத்திற்கும் எதிரான பரப்புரைகளைச் செய்யும் அதேவேளை, இந்த விடயம் பற்றிய உண்மையான கருத்துக்களையும் மற்றவர்களிடம் எடுத்துச் சென்று விளக்கமளிக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார், கனடாவின் பிராந்தியங்களில் ஒன்றான டூறம் பிராந்திய பொலிஸ் படையின் தலைமை அதிகாரியான போல் மார்ட்டின் அவர்கள்.

அமெரிக்காவில் பொலிஸ் காவலில் வைத்து ஆபிரிக்க அமெரிக்க கறுப்பு இனத்தவரான ஜோர்ஜ் பிளொயிட் மரணத்த சம்பவத்திற்கு எதிராக ஒன்பதாவது நாளாகவும் கடந்த நேற்று முன்தினம் இரவு ஆயிரக்கணக்கான மக்கள் பெரும்பாலும் அமைதியான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக கனடாவிலும் பிரதமர் மற்றும் மாகாண முதல்வர்கள் ஆகியோர் தங்கள் கண்டனங்களைத் தெரிவித்துவரும் இவ்வேளையில் டூறம் பிராந்திய பொலிஸ் படையின் தலைமை அதிகாரியான போல் மார்ட்டின் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளமை கனடாவில் பல்லின மக்களாலும் பாராட்டப்பட்டுள்ளது.

# மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த போக்குவரத்து ஒப்பந்தத்தில் ஒன்ராறியோ–யோர்க் பிராந்தியம் ஆகியவை கையொப்பமிட்டுள்ளன

ரொறன்ரோ - யோர்க் பிராந்திய நகராட்சியுடனான ஒன்ராறியோ-யோர்க் பிராந்தியப் போக்குவரத்துக் கூட்டாண்மையின் ஆரம்ப ஒப்பந்தத்தில்" கையெழுத்திட்டதைத் தொடர்ந்து, போக்குவரத்து அமைச்சர் Caroline Mulroney மற்றும் போக்குவரத்து இணை அமைச்சர் Kinga Surma ஆகியோர் இணைந்து பின்வரும் கூட்டு அறிக்கையை வெளியிட்டனர்:

ரொரன்ரோ பெரும்பாகத்தின் போக்குவரத்துடன் இணைக்கப்பட்ட - மிக விரைவான, நம்பகமான மற்றும் தடையற்ற போக்குவரத்தை வழங்கும் அதன் திட்டத்தைச் செயல்படுத்துவதில் எங்கள் அரசாங்கம் ஒரு படி அருகில் வந்திருக்கிறது.

போக்குவரத்துக்கான உள்கட்டமைப்பை விரைவாகவும் வினைத்திறனாகவும் கட்டியெழுப்புவதற்கான எங்களது உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக, யோர்க் பிராந்தியத்துடன் ஒரு மைல்கல் பூர்வாங்க ஒப்பந்தத்தில் இன்று நாங்கள் கையெழுத்திட்டிருக்கிறோம், இது Yonge வடக்கு சுரங்க ரயில் பாதை விரிவாக்கத்தை வழங்குவதன் மூலம் சுரங்கப்பாதை வலையமைப்பை கணிசமாக விரிவாக்குவதற்கு உதவும். "GTAக்கான ஒன்ராறியோவின் புதிய சுரங்கப்பாதை திட்டத்தில்," சேர்க்கப்பட்டுள்ள நான்கு முன்னுரிமை செயல்திட்டங்களில் இது ஒன்றாகும். இந்தத் திட்டம் கனேடிய வரலாற்றில் மிகப்பெரிய சுரங்கப்பாதை விரிவாக்கத்தைக் குறிக்கிறது.

ஒன்ராறியோ-யோர்க் பிராந்தியப் போக்குவரத்துக் கூட்டிணைப்பை உத்தியோகபூர்வமானதாக மாற்றுவதற்காக, யோர்க் பிராந்தியத்துடன் 2019 இலையுதிர்காலம் முதல் ஒன்ராறியோ தொடர்புகொண்டிருக்கிறது. யோர்க் பிராந்தியத்தைப் பொறுத்தவரையில், இந்தப் பூர்வாங்க ஒப்பந்தம் Yonge வடக்கு சுரங்கப்பாதை விரிவாக்கத்தை செயலாக்குவதை நோக்கித் தொடர்ந்து செயல்பட்டுக்கொண்டிருக்கும், மார்க்கம் மற்றும் றிச்மண்ட் ஹில் போன்ற பிரதானமான வேலைவாய்ப்புள்ள இடங்களிலுள்ள மக்கள், சமூகங்கள் மற்றும் தொழில்களுக்கும் சேவையாற்றுவதற்காக இதுஏற்கனவேயிருக்கும் Yonge சுரங்கப்பாதையை (Line 1) Finch ரயில் நிலையத்திலிருந்துகுறிப்பிடத்தக்களவில் நீட்டிக்கும். Yonge வடக்கு சுரங்கப்பாதைத் திட்டம் தொடர்பாக இந்த மாகாணம் மற்றும் யோர்க் பிராந்தியத்திற்கான பங்குகள், பொறுப்புகள் மற்றும் சாத்தியமான நிதி வழிமுறைகளுக்கான கட்டமைப்பை இது உருவாக்கும்.



இந்த ஒப்பந்தச் செயல்முறைக் காலம் முழுவதும், பகிரப்பட்ட போக்குவரத்து முன்னுரிமைகள் தொடர்பாக ரொறன்ரோ நகருடன் மேற்கொள்ளப்பட்ட பயன்மிக்க பேச்சுவார்த்தைகளுக்கு இதே போன்ற அணுகுமுறையை இந்த மாகாணம் கைக்கொண்டது, அது பெப்ரவரி 2020இல் ஒன்ராறியோ- ரொறன்ரோ போக்குவரத்து கூட்டாண்மை ஆரம்ப ஒப்பந்தத்தை விளைவாக்கியது. எங்களின் முக்கிய நகராட்சிப் பங்காளர்களுடனான இந்த இரண்டு ஏற்பாடுகளும், மாகாண முதல்வர் Fordஇன் வரலாற்றுச் சிறப்புமிக்க "GTAக்கான புதிய சுரங்கப்பாதைப் போக்குவரத்து திட்டத்தை" வெற்றிகரமாக வழங்குவதற்காக ரொறன்ரோ நகர் மற்றும் யோர்க் பிராந்தியம் தொடர்ந்து ஒத்துழைப்பதை ஒன்ராறியோ உறுதிசெய்யும், இதில், அனைத்து ஒன்ராறியோ இணைப்புக்களும், மூன்று-நிறுத்தங்களைக் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஸ்காபோரோ சுரங்கப்பாதை நீட்டிப்பும், திட்டமிடப்பட்ட Pearson சர்வதேச விமான நிலையத்துக்கான இணைப்பைக் கொண்டநுபடவெழெ Cross-town West நீட்டிப்பும்அடங்கும்.

Life Insurance
Don't think twice
Life Insurance Group Benefits
Critical Illness RRSP / RESP
Disability
Investments
iNFORCE LIFe Financial Services Inc.
Delivering Promises. Building Trust.

RESP
Registered Education Saving Plans
40% - 20%
Goverment Grant
Plus additional
15-10% on us.
Start Saving Early

Ajanthan (Ajay) Thavayogarajah
Insurance and Investments
Call Ajay:
416.704.8074